SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED
MONTHLY
Volume:3, Issue:2, Pages:56
SEPTEMBER-2023, Price Rs.20/-

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

செப்டம்பர் 2023, விலை ரூ.20/-



22-09-2023
வெள்ளிக்கிழமை
பகல்
மோகினி அவதாரம்

திருமலையப்ப ஸ்வாமி
வருடாந்திர பிரம்மோத்ஸவம்
18-09-2023 முதல் 26-09-2023 வரை



# திருமலையப்ப ஸ்வாமி நவராத்ரி பிரம்மோத்ஸவம்
# 2023 அக்டோபர் 15 முதல் 23 வரை

**15-10-2023**
ஞாயிற்றுக்கிழமை
பகல்:தங்க திருச்சி உத்ஸவம்
இரவு:
பெரிய சேஷ வாகனம்

**16-10-2023**
திங்கட்கிழமை
பகல் : சிறிய சேஷ வாகனம்
இரவு : ஹம்ஸ வாகனம்

**17-10-2023**
செவ்வாய்க்கிழமை
பகல் : சிம்ம வாகனம்
இரவு :
முத்துப்பந்தல் வாகனம்

**18-10-2023**
புதன் கிழமை
பகல் : கல்பவிருக்ஷ வாகனம்
இரவு : சர்வபூபால வாகனம்

**19-10-2023**
வியாழக்கிழமை
பகல் : மோகினி அவதாரம்
இரவு : கருட வாகனம்

**20-10-2023**
வெள்ளிக்கிழமை
பகல் : ஹனுமத்வாகனம்
இரவு : யானை வாகனம்

**21-10-2023**
சனிக்கிழமை
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

**22-10-2023**
ஞாயிற்றுக்கிழமை
பகல் : தங்கத்திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்

**23-10-2023**
திங்கட்கிழமை
பகல் : சக்ரஸ்நானம்
இரவு : திருச்சி உத்ஸவம்



*கத$_2$ம் பீ$_4$ஷ்மமஹம் ஸங்க்$_2$யே த்$_3$ரோணம் ச மது$_4$ஸூத$_3$ந|*
*இஷுபி$_4$: ப்ரதி யோத்ஸ்யாமி பூஜார்ஹாவரிஸூத$_3$ந||*

அர்ஜுனன் கூறுகிறார் – "மதுசூதனா! நான் போர்க்களத்தில் எவ்வாறு அம்புகளினால் பாட்டனார் பீஷ்மரையும், ஆசார்யர் துரோணரையும் எதிர்த்துப் போரிடுவேன்? ஏனெனில், பகைவர்களை அழிப்பவனே! அவர்கள் இருவருமே பூஜிக்கத்தக்கவர்கள்.

*– ஸ்ரீமத் பகவத் கீதை 2–4*

*திசி திசி கதிவித்பிர் தேசிகைர் நீயமாநா*
*ஸ்த்திரதர மநுகம்பே ஸ்த்யாந லக்நா குணைஸ் த்வம்|*
*பரிகத வ்ருஷசைலம் பார மாரோபயந்தீ*
*பவ ஜலதி கதாநாம் போதபாத்ரீ பவித்ரீ||*



தயையே! நல்வழியை அறிகின்ற ஆசார்யர்களால் அந்த அந்தத் திசையில் செலுத்தப்படுமவளாய் நற்குணங்களாகிய கயிறுகளால் மிக உறுதியாக பிரியாமல் கட்டப்பட்டவளாய் திருவேங்கடமலையைச் சேர்ந்த எம்பெருமானாகிற கரையில் ஏற்றி விடுமவளான நீ ஸம்ஸார ஸமுத்திரத்திலிருப்பவருக்கு ஓடமாகக் கருதத் தக்கவளாய் ஆகின்றாய்.

*- தயாசதகம் 38*



తిరుమల తిరుపతి దేవస్థానములు

**సప్తగిరి**

సచిత్రమాసపత్రిక

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

**ஸப்தகிரி**

சமய மாத இதழ்

तिरुमल तिरुपति देवस्थान

**सप्तगिरि**

सचित्र मासिक पत्रिका

TIRUMALA TIRUPATI DEVASTHANAMS

**SAPTHAGIRI**

ILLUSTRATED MONTHLY

ತಿರುಮಲೆ ತಿರುಪತಿ ದೇವಸ್ಥಾನಗಳು

**ಸಪ್ತಗಿರಿ**

ಸಚಿತ್ರಮಾಸ ಪತ್ರಿಕೆ

तिरुमलतिरुपतिदेवस्थानम्

**सप्तगिरिः**

सचत्रिमासपत्रिका

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

ஸப்தகிரி இதழுக்கு தாங்கள் அளித்து வரும்
ஆதரவு தன்னிகரற்றது!
தி.தி.தேவஸ்தானத்திற்கும்
வாசகர்களுக்குமிடையே ஒரு பாலமான
“ஸப்த வர்ண”
சமய மாத இதழ்

# ஸப்தகிரி

(தெலுங்கு, தமிழ், கன்னடம், ஹிந்தி, ஆங்கிலம், சமஸ்கிருதம்)

உங்கள் இல்லங்களுக்கே
அலர்மேல் மங்கை
உறை மார்பன்
மாதாமாதம் எழுந்தருளும்
அனுபூதியைப் பெறுங்கள்




.....சந்தா விவரங்கள்.....

தனிப்பிரதி : ரூ.20/-
வருடச் சந்தா: ரூ.240/-
ஆயுள் சந்தா(12 வருடங்கள்) : ரூ.2,400/-
அயல்நாட்டு வருடச்சந்தா : ரூ.1,030/-

ஸப்தகிரி சமய மாத இதழுக்கு சந்தா
செலுத்துங்கள்...

திருமலையப்பனின் அக்ஷர பிரசாதமான
“ஸப்தகிரி”யை திங்கள்தோறும்
பெற்றிடுங்கள்

பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தே. அச்சக வளாகம், கே.டி. சாலை, தி.தி.தே. திருப்பதி - 517 507.
தொலைபேசி எண்கள் : 0877-2264363, 2264543

வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி

## சமய மாத இதழ்

செப்டம்பர் 2023 மலர் 03 இதழ் 02



*சிறப்பு ஆசிரியர் :*
**திரு.** A.V. **தர்மா ரெட்டி,** ஐ.டி.இ.எஸ்.,
செயலாட்சித் தலைவர்(F.A.C.), தி.தி.தே.
*வெளியீட்டாளர்-பிரதான ஆசிரியர் :*
Dr. K. **ராதாரமணா,** எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.**சொக்கலிங்கம்,** எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
**திரு. பி.ராமராஜு,** எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
*பிரதான ஆசிரியர் அலுவலகம்,*
தி.தி.தே. திருப்பதி.
*புகைப்படங்கள் :*
**திரு.** P.N. **சேகர்**
**திரு.** B. **வெங்கடரமணா**

*பிரதிகளுக்கு:*
**THE CHIEF EDITOR,**
**"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.**
**0877- 2264543, 2264359**
**ஆசிரியர் : 2264360**

நீங்கள் ஸப்தகிரி இதழை
**www.tirumala.org**யில் பார்த்து,
படித்து மகிழலாம். ஆலோசனைகள்/
கருத்துக்கள்/புகார்களுக்கு
**sapthagiri.helpdesk@tirumala.org**

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |

இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும்
அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்

## உள்ளுறை

| உள்ளுறை | பக்கம் |
|---|---|
| **திங்கள் தோறும் ஒரு திருவேங்கடப்பாசுரம்** **திருமழிசை ஆழ்வாரும் திருமலை பிரம்மோத்ஸவமும்** -பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி. | 07 |
| **சங்க இலக்கியங்களில் வேங்கடமலை** -முனைவர் பிரியாகிருஷ்ணன், சென்னை. | 12 |
| **சிந்து பூ மகிழும் திருவேங்கடம்** -காயார் கோமடம் சேஷாத்ரிதாசன், காஞ்சிபுரம். | 14 |
| **புரட்டாசியில் பெருமாள் வழிபாடு ஏன்?** -திரு. ஜி. வேலாயுதம், சேலம். | 17 |
| **திருமலையப்பனின் மகிமை** -திரு. கிருஷ்ணமூர்த்தி ராமாநுஜ தாசன், செய்யார். | 18 |
| **ஏழுமலையானை தரிசனம் செய்வது எப்படி?** -திரு. எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி. | 20 |
| **ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம்** - டாக்டர் சி. கோவிந்தசாமி, புத்தூர். | 25 |
| **திருவராகனும் திருவேங்கடத்தானும்** - திரு. எஸ். சுதர்சனம், நங்கைநல்லூர். | 31 |
| **திருவேங்கடவனின் கிருஷ்ணாவதாரம்** -திரு.ஏ.கே. கோபி, கள்ளக்குறிச்சி. | 34 |
| **கோவிந்தனுக்கு கோ சேவை** -திரு. அத்தி ரங்கராஜன், திருப்பதி. | 38 |
| **ஏகாதசி** - திரு. துளசி கிருஷ்ணா, சென்னை. | 42 |
| **ராசிபலன்கள் : செப்டம்பர் 2023** - டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம். | 45 |
| **சந்தேகம் தெளிவோம்** - நாவல்பாக்கம் ஸ்ரீஉ.வே.வாஸுதேவாசார்யார், திருவனந்தபுரம். | 46 |
| **நீதிக்கதை : சரணாகதியே நம்மை காக்கும்** -முனைவர் ச. செந்திலாண்டவன், சென்னை. | 47 |
| **சித்திரக்கதை : காளிங்க நர்த்தனம்** - திருமதி எஸ். வைஷ்ணவி, திருப்பதி. | 52 |

### வாசகர்களுக்கு...

***இவ்விதழ் பிரம்மோத்ஸவ சிறப்பிதழாக வெளிவருவதால் இந்த இதழில் வெளிவர வேண்டிய தொடர் கட்டுரைகள் யாவும் அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து வெளிவரும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.***

*- பிரதான ஆசிரியர்*

### அட்டைப்பட விளக்கம்

*முன்னட்டை :* *மோகினி அலங்காரத்தில் திருமலையப்ப ஸ்வாமி, திருமலை.*
*பின்னட்டை :* *திருமலையப்ப ஸ்வாமி திருத்தேர், திருமலை.*

உங்களுடன்...

# திரு மலையப்பன் வோணத் விழா

அனைத்து பிரம்மாண்டங்களிலும் வேங்கடாத்ரிக்கு இணையான புண்ணியத் திருத்தலம் இல்லை. வேங்கடாத்ரி வாசனான திருவேங்கடமுடையானுக்கு இணையான தெய்வம் எக்காலத்திலும் இல்லை. ஆதலால் தான் திருமலை "கலியுக வைகுந்தம்" எனப் போற்றப்படுகிறது. திருவேங்கடமுடையானும் கலியுக கண்கண்ட தெய்வமாகப் போற்றப்படுகிறார். வேங்கடாத்ரியை நினைத்தாலே நாம் செய்த பாவங்கள் அனைத்தும் போய் விடும். இதனையே ஆழ்வார்களும், "திருவேங்கட மாமலை ஒன்றுமே தொழ நம் வினை ஓயுமே" என்றும், "சென்று வணங்குமினே சேனுயர் வேங்கடத்தை" என்றும் வேங்கடமலையின் சிறப்பினை பாசுரம் இடுகின்றனர். திருவேங்கடமுடையானுக்கு நடைபெறும் உத்ஸவங்களில் மிகவும் சிறப்பு பெற்றது பிரம்மோத்ஸவமாகும். மாட வீதிகளில் எழுந்தருளும் திருவேங்கடவனை தரிசிக்க நாம் மட்டுமல்ல அனைத்து தேவதைகளும் தம்தம் வாகனங்களில் இங்கே வருகின்றனர். அன்னமய்யா, தம் கீர்த்தனையில் "திருவீதுல மெரஸே தேவதேவுடா", "நாநா திக்குல நருலெல்லா வானலலோனே வத்துரு" எனப் புகழ்வதுபோல, வெவ்வேறு வாகனங்களில் எழுந்தருளும் ஸ்ரீநிவாசனை தரிசிக்க வருடந்தோறும் பிரம்மோத்ஸவத்தை நடத்துகின்றனர். பிரம்ம தேவனே முன் நின்று இதை நடத்துவதினால் பிரம்மோத்ஸவம் எனப்படுகிறது. திருவேங்கடமுடையானின் அவதார நட்சத்திரமான புரட்டாசி திருவோணத்தன்று நிறைவடையும் வகையில் 10 நாட்கள் சிறப்பாகத் திருமலையே திருவிழாக் கோலம் பூண்டு கோலாகலமாக திருவோணத் திருவிழா நடைபெறும்.



இவ்வாண்டு செப்டம்பர் 17ஆம் தேதி முதல் 26ஆம் தேதி வரை இப்பிரம்மோத்ஸவம் நடைபெறுகிறது. இவ்வருடம் தெலுங்கு மொழி சாந்திரமானப்படி அதிகமாதம் வருவதால் அக்டோபரில் நவராத்திரி பிரம்மோத்ஸவமும் நடைபெற இருக்கிறது. உத்ஸவம் என்றாலே சிறப்பான யாகம். இந்த யாகத்தினால் இறை பக்தியும், மானிடர்களாகிய நமக்கு மன மகிழ்ச்சியும் உண்டாகிறது. பகவத் இராமாநுஜரோ புனிதமான திருத்தலமான இத் திருமலையில் தம் பாதங்கள் படுவதால் தமக்குப் பாவம் உண்டாகும் என்று எண்ணி தம் முழங்கால்களால் தவழ்ந்து ஏறி திருமலையை அடைந்தார். ஆழ்வார்களும் தம் பாசுரங்களில் திருவேங்கடவனை புகழ்வதோடு அப்பெருமான் கொலுவீற்றிருக்கும் திருமலைச் சிகரங்களும், அம்மலையில் இருக்கும் மரம், செடி, கொடிகளும், நீரருவிகளும், விலங்குகளும் புனிதமானவையே என்கின்றனர். இதனை முன்னிட்டே குலசேகராழ்வார் "பொன் மலைமேல் ஏதேனும் ஆவேனே" என்று பாசுரமிடுகிறார். இதிலிருந்தே இம்மலையின் புனிதத்தை நாம் அறியலாம்.

எனவே, நாம் திருமலையில் இருக்கும்பொழுது சமூக ஒழுக்கங்களைக் கடைபிடித்தல் வேண்டும். ஆலய சுற்றுப்புறப் பகுதிகளில் காலணிகளைக் கொண்டு நடப்பதைத் தவிர்த்து கோவிந்த நாமத்தைத் துதித்தபடி, ஸ்வாமியைத் தரிசித்தல் வேண்டும். திருவேங்கடமுடையானின் தரிசனமொன்றே நமது பெரும் பேறாக எண்ணி இத்திருமலைக்கு வருதல் வேண்டும்.



இத்திருமலையின் புனித தன்மைக்கு இழுக்கு ஏற்படாத வண்ணம் இத்திருத்தலத்தை தூய்மையாக வைத்திருத்தல் நம் கடமையாகும். ஆங்காங்கே பிளாஸ்டிக் குப்பைகளை தூக்கி எறியாதீர்கள். இலட்சக்கணக்கான பக்தர்கள் கூடும் திருமலை எவ்வளவு தூய்மையாக இருத்தல் வேண்டும் என்பதை நாம் அறிதல் வேண்டும். ஸ்வாமி தரிசிக்க வரும் நாம் அகத்தூய்மையோடு, புறத்தையும் தூய்மையாக வைத்துக் கொண்டு பரம்பொருளின் இன்னருளைப் பரிபூரணமாகப் பெற்றிடுவோம்.




# திருமழிசை ஆழ்வாரும் திருமலை பிரம்மோத்ஸவமும்

– பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி,
புவனகிரி, 94434 39963.

அது ஒரு புரட்டாசி மாதம், திருவோண நட்சத்திரம், திருமலையப்பனின் அவதார நட்சத்திரம் அல்லவா! அன்று திருமலையில் என்ன விசேஷம்? பிரம்மோத்ஸவம்.

திருவேங்கட மலையில் பிரம்மோத்ஸவம் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிற காலம் அல்லவா? *''வீங்கு நீர் அருவி வேங்கடம்''* என்று சிலப் பதிகாரத்தில் வர்ணிக்கப்பட்ட திருமலையில், துள்ளும் அருவிகளோடும், வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கும் சோலைகளோடும் காட்சி தரும் திருமலையின் அழகை ரசித்துக் கொண்டே படி ஏறுகிறார் திருமழிசையாழ்வார். இந்த பிரம்மோத்ஸவத்தை காணத்தானே தேவர்கள் அனைவரும் திரண்டு திருமலைக்கு வருகின்றனர்.

எத்தனை குதூகலம் திருமலையில்? எத்தனை ஆடல், பாடல்கள் திருமலையில்? எத்தனை அடியார்கள் கூட்டம் திருமலையில்? எத்தனை கோவிந்த நாம கோக்ஷம் திருமலையில்?

*''நாடும் நகரமும் நன்கு அறிய நமோ நாராயணா''* என்று பாடும் மனம் உடையவர்கள், திரண்டு வந்து திருமலையப்பனைச் சேவிக்கும் காட்சி, கண் கொள்ளாக் காட்சியல்லவா!

அந்தக் காட்சியைக் காணத்தானே ஆழ்வாரும் விரும்புகிறார். அதற்காகத்தானே இன்று திருமலையில், ஒவ்வொரு படியாக ஏறிக் கொண்டிருக்கிறார். எம்பெருமானுடைய சர்வ வியாபகத்துவம் ஒவ்வொரு திருமலைக் காட்சியிலும் எதிரொலிக்கிறது.

பறவைகளின் ஒலி, அங்குமிங்கும் தாவும் மான்களின் ஒலி, மயில்களின் ஒலி, குளிர்ச்சியோடு கொட்டும் அருவிகளின் ஒலி, மரங்களும், இலைகளும், கிளைகளும் அசையும் ஒலி என ஒவ்வொரு ஒலியும் ஆழ்வாருக்கு ஓங்காரமான பிரணவத்தையும் – பிரணவத்தின் அதிர்வையும், பிரணவத்தின்

அர்த்தத்தையும் மனதில் எதிரொலித்துக் கொண்டே இருப்பதை அனுபவித்துக் கொண்டே செல்கிறார் அவர். எத்தனை அருமையானது எம்பெருமானின் பிரம்ம உத்ஸவம்? பவிஷ்ய புராணத்தில் முதன் முதலாக திருமலை அப்பனுக்கு பிரம்ம உத்ஸவம் நான்முகனால் கொண்டாடப் பட்டது என்ற குறிப்பு இருக்கிறது.

பிரம்மன் கொண்டாடியது பிரம்ம உற்சவம். பிரம்மத்தைக் கொண்டாடுவ தால் பிரம்மோத்ஸவம். எது பெரிது? பிரம்மம் பெரிது. எம்பெருமான் பெரிய வன் அல்லவா. அந்த எம்பெருமானுக்குக் கொண்டாடப்படும் உத்ஸவம் என்பதால் பிரம்மோத்ஸவம் என்று சொல்லிக் கொண்டே போகலாம்.

ஆனால், "இவன் தான் பிரம்மம். இந்த பிரம்மம்தான் திருமலையில் எழுந்தருளி இருக்கிறது" என்பதைக் காட்டுவதற்காகவே உள்ள உற்சவம் தான் பிரம்மோத்ஸவம். புராணங்களிலும், கல்வெட்டுகளிலும் காட்டியபடி அன்று நடந்த பிரம்மோத்ஸவம் இன்றைக்கும் அதே உற்சாகத்தோடு கொண்டாடப்படுவது ஆச்சரியம் அல்லவா! பிரம்மோத்ஸவத் தின் போது ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வாகன சேவையில் எம்பெருமான் மாடவீதிகளில் காட்சிதர, மாலவன் பக்தர்கள் ஆடல் பாடல்களோடு அந்வயிக்கும் அற்புதமல்லவா! அமர்க்களமான வாத்திய ஒலிகளும், வேத ஒலியும், விழா ஒலியும் சேர்ந்து ஒலிக்க, மந்தகாசமான புன்னகையோடு எம்பெருமான் வலம் வரும் அழகைக் காணக் கண் கோடி வேண்டும்.

இதை நினைத்துக் கொண்டே வருகின்றார் ஆழ்வார். அவருடைய மனம் முழுக்க அந்த விழாவின் பல்வேறு ஒலிகள் தான் நிறைந்திருக்கின்றன. இதோ "கல்" என்று அருவி கொட்டுகிறது. அது எம்பெருமானுடைய திருநாமத்தைக் கூறுவது போல இருக்கிறது. அந்த விழாவின் சப்த ஜாலங்கள் அனைத்தும் ஒருங்கிணைந்து இதயத்தை மயக்குகிறது.

திருமலையில் ஏறும்பொழுது விழாவின் ஒலி, மெல்லிய ஒலியாகத் துவங்கி, திருக்கோயிலை நெருங்க, நெருங்க



## "பிரம்ம ரதம்"

*'ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி*
*வழுவிலா அடிமை செய்யவேண்டும் நாம்*
*தெழிகுரலருவித் திருவேங்கடத்து*
*எழில் கொள் சோதி எந்தை தந்தை தந்தைக்கே"*

**என்கிறது ஸ்வாமி நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழிப்பாசுரம். இதில் "எந்தை தந்தை தந்தைக்கே" என்று முடிக்கிறார். எந்தை தந்தை என்பது நம்மையெல்லாம் படைத்த படைப்புக் கடவுளான பிரம்ம தேவர். அந்த பிரம்ம தேவருக்கே தந்தை சாக்ஷாத் ஸ்ரீமந்நாராயணன். அந்த எம்பெருமானே நம்மையெல்லாம் கலியின் பிடியிலிருந்து உய்விக்க வந்த திருவேங்கடத்து எம்பெருமான்.**

**அர்ச்சை வடிவில் இத்திருமலையில் நின்ற கோலத்தில் தரிசனம் தரும் அந்த எம்பெருமானுக்கு பிரம்ம தேவரே முன்னிருந்து நடத்தும் பிரம்மோத்ஸவம் இது. அதை அனைவருக்கும் தெரிவிக்கும் வண்ணமாக, காலையிலும், இரவிலும் எம்பெருமான் வீதி உலா காணும்போது அந்த வாகனங்களுக்கு முன்பாக பிரம்ம ரதம் என்ற சிறு தேர் இழுத்துச் செல்லப்படுகிறது. இந்த ரதத்தின் வழிகாட்டுதலைத் தொடர்ந்தே வாகன சேவைகள், இத்திருமலையில் நடைபெறுகின்றன. இந்த விசேஷம் வேறு எந்த திவ்ய தேசங்களிலும் வழக்கில் இல்லை. இதுவே திருவேங்கட முடையானை கலியுகத் தெய்வம் என்பதை நிரூபிக்கிறது.**

# தண்ணீரமுதோத்ஸவம்



சாக்ஷாத் திருவேங்கடமுடையானால் ''தாத்தா'' என்று அழைக்கப்பட்ட திருமலை நம்பிகள் திருவேங்கடத்து எம்பெருமானுக்குத் தீர்த்த கைங்கர்யமும், மந்திர புஷ்ப கைங்கர்யமும் செய்தவர். எவ்வித வசதிகளும் இல்லாத அக்காலத்திலேயே தினமும் எம்பெருமானின் தீர்த்த கைங்கர்யத்திற்காக பாபவிநாசனம் தீர்த்தம் வரை நடந்து சென்று, மிகவும் பக்தியுடன் எம்பெருமானின் அபிஷேகத்திற்கும் ஆராதனைக்கும் தீர்த்தம் கொண்டு வந்து சமர்ப்பிப்பார். திருவேங்கடவன் ஒரு வேடுவச் சிறுவன் வடிவில் வந்து தனது பக்தரின் சிரமத்தைத் போக்க, ஆகாச கங்கை என்னும் தீர்த்தத்தை உருவாக்கி, ஸ்வாமிக்கு இங்கிருந்து தினமும் தீர்த்த கைங்கர்யம் செய்தால் போதும் எனக் கூறினார். இன்றும் திருமலை ஆலயத்தில் ஆகாச கங்கையிலிருந்தே ஸ்வாமிக்கு தீர்த்தக் கைங்கர்யம் நடைபெற்று வருகிறது. ஆண்டுதோறும் அத்யயனோத்ஸவத்தின் இறுதி நாளன்று ஸ்ரீசைலபூர்ணரின் நினைவாக ஆகாச கங்கை உத்ஸவம் (தண்ணீர் அமுது உத்ஸவம்) நடை பெறுகிறது.



கொஞ்சம் கொஞ்சமாக ஒலியின் அளவு கூடி, ஆழ்வார் உணர்வுகளை அப்படியே மயக்கம் கொள்ள வைக்கிறது. அவருடைய மனம் முழுக்கத் திருவோண விழாதான். மனம் விழாவிலேயே லயித்து இருந்தது. ஆராத மனக்காதல் தொண்டர்களோடு சேர்ந்து கலந்து ஆண்டவனை அநுபவிக்கும் வாய்ப்புக்காகத் துடித்துக் கொண்டிருந்தார். அந்த ஒலிகளை எல்லாம் கேட்டு ரசித்துக் கொண்டே இருந்தார்.

“பகவானே உன்னைக் காண, இதோ, இந்த அடியவன் வந்து கொண்டே இருக்கிறேன். இன்னும் சற்று நேரம் தான். இன்னும் சில படிகள் தான். இதோ வந்து விட்டேன். விண்ணவரும் மண்ணவரும் காணத் துடிக்கும் வேங்கட வனே, உன் உருவம்தான் என் மனதில் நிறைந்து இருக்கிறது என்று சொல்லிக் கொண்டே படியேற, திடீரென்று அந்த ஒலிகள் குறையத் தொடங்கியது.

இது என்ன வியப்பு? கோயிலை நெருங்க நெருங்க ஒலி கூட வேண்டுமே!

அந்த அநுபவத்தை நினைத்துக்கொண்டு தானே மலையேறிக் கொண்டிருக்கிறேன். இப்போது கொஞ்சம் கொஞ்சமாக ஒலி குறைந்து சுத்தமாக



## ரதரங்க டோலோத்ஸவம்

**திருவேங்கடமுடையான் பிரம்மோத்ஸவத் திருநாட்களில் ஆறாம் நாள் மாலை தங்க ரதோத்ஸவம் நடைபெறும். இதை "ரதரங்க டோலோத்ஸவம்" என்பார்கள். தங்க மயமான ரதத்தில் பொன்னே பெண்ணுருக்கொண்டு வந்தது போல தோற்றமளிக்கும் உபயதேவிமார்களோடு தானே ஒரு "கொங்கு பங்காரமாக" தரிசனம் தந்து நான்கு மாட வீதிகளிலும் ஸ்வாமி உபய நாச்சிமார்களுடன் உலா வருவர். "பங்காரம்" என்றால் தங்கம் என்று பொருள். நம் போன்ற சாமான்ய பக்தர்களுக்கு காணக்கிடைக்காத தங்கம் தானே இந்த எம்பெருமான். இந்த தங்கரத உற்சவத்தையும் வேறு எந்த திவ்ய தலங்களிலும் நம்மால் தரிசிக்க இயலாது. இந்த ஸ்வர்ண ரதத்தினை பொன்மேனி பெண்களால் நான்கு மாடவீதிகளில் இழுக்கப்படுவதும் ஓர் தனிச்சிறப்பு ஆகும்.**

கேட்க வில்லையே, என்ன காரணம்? என்று துடித்துப் போய் விடுகின்றார். எங்கும் அமைதி. எந்த ஒலியும் இல்லை. இப்பொழுது திடீர் என்று ஒரு ஒலி மெல்லியதாகத் துவங்கி கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து கொண்டே வருகிறது.

ஆழ்வார் உற்று, கூர்மையாகக் கவனிக்கிறார். வெளியிலிருந்து வருகின்ற ஒலிகளாகத் தெரிய வில்லையே. அப்படியானால் இந்த ஒலி எங்கே இருந்து வருகிறது? ஒலி கொஞ்சம் கொஞ்சமாகக் கூடிக் கொண்டே போகிறது. புறத்தில் இருந்து விலகி அகத்தை நோக்கினார். "அடடா... இந்த ஒலி உள் ஒலி அல்லவா... இது வெளியில் இருந்து வரவில்லை. உள்ளே இருந்து அல்லவா வருகிறது.

உற்று கவனிக்கிறார். இந்த ஒலிகள் இப்பொழுது காட்சிகளாக விரிகிறது. ஆழ்வார் ஆழ்ந்து அகத்தைப் பார்க்கிறார். அங்கே இருந்து தான் இந்த ஒலி வருகிறது. ஆனந்த நிலைய மாடவீதிகளின் காட்சிகள் இப்போது மனதில் விரிகின்றன.

இதோ அந்த மலையப்ப ஸ்வாமி கருட வாகனத்தில் ஏறி கண்கொள்ளாக் காட்சியாக வலம் வந்து கொண்டிருக்கிறான். எத்தனை ஆட்டங்கள். எத்தனை பாட்டங்கள். தேவாதி தேவர்கள் கூடி பூமழை பொழிய, அந்தக் காட்சி மேலே மேலே பெருகிக் கொண்டே இருக்கிறது.

திருமழிசை ஆழ்வாரின் மனம் கசிகிறது. உள்ளம் குழைகிறது. "எம்பெருமானே, நான் உன்னைக் காணவும், ஓணப் பெருவிழாவை அனுபவிக்கவும் வந்து கொண்டிருந்தேன். ஆனால் நீயோ, அத்தனையும் வாரிச் சுருட்டிக் கொண்டு என் நெஞ்சில் புகுந்து விட்டாய். உன் கருணைதான் என்னே...." இதோ அற்புதத் தமிழாய் அந்த அனுபவப் பாசுரம் விரிகிறது.

*''காண லுறுகின்றேன் கல்லருவி முத்துதிர,*
*ஓண விழவில் ஒலியதிர - பேணி*
*வருவேங் கடவா என் னுள்ளம் புகுந்தாய்*
*திருவேங் கடமதனைச் சென்று''.*

நானோ திருமலையில் வந்து உன்னைக் காண விரும்பியிருக்கின்றேன். நீயோ அங்கு நின்றும் என்னுள்ளத்தே வந்து உறைகின்றாய். இனி நான் என் செய்வேன்! என்னும் ஆழ்வார் திருவுள்ளத்தை இந்தப் பாசுரத்தின் மூலம் அறிகிறோம்.

இதோ சுவையான வியாக்யானம்: *''கல்லருவி முத்துதிர''* என்பதும், *''ஓணவிழவி லொலியதிர''* கடத்தில் விசேஷணமாக அந்வயிக்கக்கடவன. *''உதிர அதிர''* என்பவை வினை எச்சங்களாயினும் பெயரிலே அந்வயிருக்குமென்க.

எப்போதும் பேரொலி செய்து கொண்டு வீழ்கின்ற அருவிகளிலே முத்துக்கள் உதிரப் பெற்றதும் (திருவேங்கடமுடையானுடைய திருவவதார நக்ஷத்திரமான) திருவோணத் திருவிழாவில் மங்களாசாஸனத்வநிகள் மிகப் பெற்றதுமான திருவேங்கடம் என்கை.

*''பேணி வரு''* என்பதும் திருவேங்கடத்திற்கு விசேஷணம், பல திசைகளில் நின்றும் பலர் விரும்பி வந்து பணியப்பெற்றதென்கை. இப்படிப்பட்ட

திருமலையிலெழுந்தருளியிருக்கும் பிரானே! நீ அத்திருமலையை விட்டு என்னுள்ளம் புகுந்தாய், இனி நீ திருமலையில் இல்லையாயினும் "நீ உகந்து வாழ்ந்த விடம்" என்கிற காரணத்தினால் அத் திருமலை தன்னைச் சென்று காணவே நான் விரும்புகின்றேனென்றவாறு.

ஈஸ்வர லாபம் பெற சேதனன் முயல, சேதன லாபம் பெற அந்த சர்வேஸ்வரனே வந்தான். அந்த லாபம் பெறத்தானே அவன், விண்ணிலிருந்து மண்ணுக்கு வந்து, திருமலையில் நின்று கொண்டிருக் கிறான்.

பாசுரம் அறிவோம்...



# பரிவட்ட மரியாதை

பரிவட்டம் என்பது ஒரு பட்டு வஸ்திரம். தனக்கு கைங்கர்யம் பண்ணுகின்ற கைங்கர்ய பரர்களுக்கு எம்பெருமான் வழங்கும் ஒரு மரி யாதை, கௌரவம் என்று கூடச் சொல்லலாம். இந்த "பரிவட்டம்" உற்சவ மூர்த்தியான திருமலையப்ப ஸ்வாமியின் திருவடிகளில் வைக் கப்பட்டு வாகன சேவை முடித்து திருமலையப்ப ஸ்வாமி கோயிலுக்குள் எழுந்தருளி ரங்க நாயகர் மண்டபத்தில் கொலு இருப்பார். பின்னர் அன்றைய உபயதாரர்களுக்கும், பெரிய கேள்வி அப்பன் பெரிய ஜீயர் ஸ்வாமிகளுக்கும், ஆலய அதிகாரிக்கும் கட்டப்படுகிறது.

பரிவட்டம் அவர்களது தலையைச் சுற்றி கட்டப்பட்டு அவர்களுக்கு "சடாரி" வழங்கப்பட்ட வுடன் அவர்கள் எம்பெருமானை சாக்ஷ்டாங்க மாக விழுந்து சேவித்து எம்பெருமானின் திருவருளுக்குப் பாத்திரமாகிறார்கள். இதை அவர்களின் கைங்கர்யங்களுக்கு எம்பெருமான் கொடுக்கும் ஒரு அங்கீகாரமாகவும் கொள்ள லாம். நாம் தினமும் தரிசிக்கின்ற உற்சவ மூர்த்தியான திருமலையப்ப ஸ்வாமியின் நித்ய கல்யாண உற்சவத்தில், முடிவான கட்டத்தில் அக்ஷதாரோபணத்திற்கு முன்னால் அர்ச்சக ஸ்வாமிக்கு இந்த பரிவட்ட மரியாதை நடப்பதை பார்த்திருக்கிறோம் அல்லவா! பிரம்மோத்ஸவத் தின் போதும் காலையும் இரவும் வாகன சேவை முடிந்ததும், ஆஸ்தானத்தின் போது காலையும் இரவும் இந்த "மரியாதை" நடப்பது திருமலைக்கே உரிய விசேஷத்தில் ஒன்று.

**(பக்கம் 8-11) பெட்டிச்செய்திகள் தொகுப்பு : திருமதி டி.கே. லக்ஷ்மி கிருஷ்ணஸ்வாமி, திருப்பதி, 9440120758.**



# சங்க இலக்கியங்களில் வேங்கடமலை

– முனைவர் பிரியாகிருஷ்ணன்,
சென்னை,
72995 87879

*“பல்பொறிப் புலிக்கேழ் உற்ற*
*பூவிடைப் பெருஞ்சினை*
*நரந்த நறும்பூ நாள்மலர் உதிரக்*
*கலைபாய்ந்து உகளும்*
*கல்சேர் வேங்கைத்*
*தேம்கமழ் நெடுவரைப் பிறங்கிய*
*வேங்கட வைப்பிற் சுரன் இறந்தோரை”*

– அகம் 141

இக்காலத்தில் திருப்பதி என வழங்கப்படும் திருவேங்கட மலை பற்றிச் சங்கப்பாடல்கள் வேங்கட நாடு, வேங்கட நெடுவரை, வேங்கட வரைப்பு, வேங்கடச்சுரம், வேங்கடமலை என்றெல்லாம் குறிப்பிடுகின்றன. வேங்கட நாட்டை புல்லி, ஆதனுங்கன், கரும்ப னூரன், திரையன், தொண்டையர் ஆகியோர் அவ்வப்போது ஆண்டு வந்தனர். சங்க இலக்கியத்தில் வேங்கடமலைக் குறித்து பத்துப்பாட்டில் பட்டினப்பாலை, சிறுபாணாற்றுப்படை ஆகியவற் றில் சில குறிப்புகளும், எட்டுத் தொகையில் அகநானூறு, புற நானூறு, குறுந்தொகை ஆகியவற்றில் சில குறிப்புகளும் காணப் படுகின்றன. அதேபோல் புறப்பொருள் வெண்பாமாலையில் சில குறிப்புகளும், சிலப்பதிகாரத்தில் சில குறிப்புகளும் காணப்படு கின்றன.

புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர் ஐயனாரிதனார் திருவேங்கடத்தைக் குறிப்பிடும் போது அங்கு எழுந்தருளி இருக்கும் இறைவன் திருவாழியைத் தரித்துக் கொண்டிருக்கும் குறிப்பை ஆழியவன் என்ற சொல்லால் குறிப்பிடுவதை,

*வெறிகொள் அறையருவி வேங்கடத்துச் செல்லின்*
*நெறிகொள் படிவத்தோய் நீயும்-பொறிகட்(கு)*
*இருளீயும் ஞாலத்(து) இடரெல்லாம் நீங்க அருளீயும் ஆழி யவன்*

(புறப்பொருள் வெண்பாமாலை/பாடாண் படலம்) என்று இப்பாடல் வழி அறிய முடிகின்றது.

வேங்கை மரத்தின் பூக்கள் பல புள்ளிகளையுடைய புலியின் நிறத்தை ஒப்பக் கீழே உதிர்ந்து கிடக்கின்றன. வேங்கை மரங்களின் இடையே நாரத்தை மரங்களும் காணப்பெறுகின் றன. இவற்றினிடையே முகக்கலைகள் பாய்ந்து தாவுவதால் நாரத்தையின் புதிய மலர்கள் உதிர்கின்றன. இத்த கைய சூழ்நிலையையும் தேன் நாறும் சிகரங்களையும் கொண்டது வேங்கட வைப்பு என்று வேங்கடமலை குறித்துப் பேசப்படுகின்றது.

சிலப்பதிகாரத்தில் மாங்காட்டு மறையோன் தல யாத்திரை செய்து வருகின்றான். உறையூரையடைந்த கோவலனும் கண்ணகியும் கவுந்தியடி களுடன் மதுரைக்குச் செல்லும் வழி யில் இளைப்பாறும் பொருட்டு ஒரு இடத்தில் தங்குகின்றனர். மறையோ னும் அங்கு வருகிறான். அவனைக் கண்ட கோவலன் “யாது நும்மூர்? ஈங்கென் வரவு?” என்கிறான். அதற்கு

பதில் கூறுமிடத்து திருவரங்கம் குறித்தும், திருவேங்கடம் குறித்தும் மறையோன் கூறுவதைப்போல் அமையும் பாடல் வரிகள் பின்வருமாறு.

*"நீல மேக நெடும்பொற் குன்றத்துப்*
*பால்விரிந் தகலாது படிந்தது போல*
*ஆயிரம் வீரித்தெழு தலையுடை அருந்திறல்*
*பாயற் பள்ளிப் பலர் தொழு தேத்த*
*விரிதிரைக் காவிரி வியன் பெருந் துருத்தித்*
*திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும்;*
*வீங்குநீர் அருவி வேங்கடம் என்னும்*
*ஓங்குயர் மலயத்து உச்சி மீமிசை*
*விரிகதிர் ஞாயிறுந் திங்களும் விளங்க*
*இருமருங் கோங்கிய இடைநிலைத் தானத்து*
*மின்னுக் கோடியுடுத்து விளங்குறிற் பூண்டு*
*நன்னிற மேகம் நின்றது போலப்*
*பகையணங் காழியும் பால்வெண் சங்கமும்*
*தகைபெறு தாமரைக் கையின் ஏந்தி*
*நளங்கினர் ஆரம் மார்பில் பூண்டு*
*பொலம்பூ வாடையில் பொலிந்து தோன்றிய*
*செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்"*

– சிலம்பு :காடுகாண்காதை:35–51

இதனைத் தவிர,

*"நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்*
*தமிழ்வரம் பறுத்த தண்புனல் நல்நாட்டு"* என்றும்,
*"வேங்கட மலையும் தாங்கா விளையுள் காவிரி நாடும்"*

என்றும் வருகின்றது.

*"வேங்கடம் பயந்த வெண்கோட்டு யானை*
*மறப்போர் பாண்டியர்"* – அகம்.27

என்ற பாடல் வழி புல்லி என்ற அரசன் ஆண்ட வேங்கட நாடு வேழங்கள் மலிந்த நாடு என்பதை அறிய முடிகின்றது. இவனும் வேங்கடத்தையும் அதனைச் சூழ்ந்த நாடுகளையும் ஆண்டவன்.

*"அவரே ... மாஅல் யானை மறப்போர்ப் புல்லி*
*காம்புடை நெடுவரை வேங்கடத்து உம்பர்*
*அறையிறத் தகன்றனர் ஆயினும் நிறையிறந்து*
*உள்ளா ராதலோ அரிதே* – அகம்.209

என்ற அகநானூற்றுப் பாடலிலும் வேங்கட மலை குறிப்பிடப்பட்டுள்ளதை அறியலாம்.

*....... "சாரல்*
*ஈன்றுநாள் உலந்த மென்னடை மடப்பிடி*
*கன்றுபசி களைஇய பைங்கண் யானை*
*முற்றா மூங்கில் முளைதரு பூட்டும்*
*வென்வேல் திரையன் வேங்கட நெடுவரை"*

– அகம்.85

ஈன்று அணிமை கழிந்த மெல்லிய நடை கொண்ட பிடி யானைக்கு அதன் கன்றின் பசியைப் போக்குவதற்குப் பசிய கண்களை உடைய ஆண் யானை மூங்கிலின் முற்றாத முளையினைக் கொண்டு உண்பிக்கும் மலைச் சாரலையுடையது திரையன் என்னும் அரசன் ஆட்சி செய்யும் வேங்கடமலை என்று மேற் கூறிய பாடல் தெரிவிக்கின்றது. திரையன் தமிழகத்துப் பேரரசர் மூவரோடும் ஒருங்கு வைத்து மதிக்கத்தக்க பண்பாளனாக விளங் கியவன். திருமாலை முதல்வரைக் கொண்ட குடியிற்பிறந்தவன். இவ்வாறாக பல சங்கப் பாடல்களில் வேங்கடமலை குறித்துப் போற்றப் படுவதை
அறியலாம்.





# சிந்துபூ மகிழும் திருவேங்கடம்

– காயார் கோமடம் சேஷாத்ரிதாஸன் , காஞ்சிபுரம்

*வேங்கடாத்ரி ஸமம் ஸ்தானம் ப்ரஹ்மாண்டே நாஸ்தி கிஞ்சன।*
*வேங்கடேச ஸமோ தேவோ ந பூதோ ந பவிஷ்யதி॥'*

என்ற சுலோகம் மிகவும் பொருள் பொதிந்தது. திருவேங்கடமுடையானின் பெருமையைத் தனது இரண்டாவது அடியில் சொல்லும் இந்த சுலோகம், அப்பெருமான் எழுந்தருளியிருக்கும் திருமலையின் பெருமையைத் தன்னுடைய முதல் அடியிலேயே விளக்கி விடுவதுதான் சிறப்பு.

நம் திருவேங்கடமுடையானுக்குச் சமமான தெய்வம் வேறு யாரும் இதுவரையில் தோன்றியது மில்லை; தோன்றப் போவதுமில்லை. அப்படிப்பட்ட எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் காரணத்தால், திருமலையாகிய நம் திருவேங்கடமலைக்கு இணையான வேறோரிடம் இப்பிரபஞ்சத்திலே எங்கும் இல்லை.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது முன்னோர் வாக்கு. நம் தேசமெங்கும் சிறியதும் பெரியதுமாக எத்தனையோ திருக் கோயில்கள் நிறைந்திருக்கின்றன. அவற்றில் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் வெவ்வேறு அர்ச்சாவதார மூர்த்திகள் பிரதிஷ்டை செய்யப்பட்டு பக்தகோடிகளால் வழிபடப் படுகின்றன. அவற்றுள், எம்பெருமானின் திருக்கல்யாண குணங்களில் ஆழங்காற்பட்ட நம் ஆழ்வார்களால் மங்களா சாஸனம் செய்யப்பட்ட திருத்தலங்களே திவ்ய தேசங்கள் என்று பெருமையுடன் போற்றப்படு கின்றன. நம் திருமலையோ ஆழ்வார்கள் பதின் மரால் திகட்டத் திகட்ட மங்களாசாஸனம் செய்யப் பட்ட பெருமைக்கு உரியது. அன்னமாச்சார்யர் உள்ளிட்ட உன்னதமான பக்தர்களால் புகழ்ந்து பாடப்பட்டது. அதுமட்டுமின்றி, ஸ்ரீமத்ராமாநுஜர், ஸ்ரீவேதாந்த தேசிகர், ஸ்ரீமணவாளமாமுனிகள், ஸ்ரீமத் ஆதி சங்கரர், ஸ்ரீமத்வாசாரியர் போன்ற மகான்கள் மங்களாசாஸனம் செய்த பெருமைக்குரிய சிறந்த திருத்தலமாகவும் விளங்குகின்றது. ஸ்ரீவேதாந்த தேசிகர் தாம் இயற்றிய தயாசதகம் என்ற ஸ்தோத் திரத்தில் எம்பெருமான் திருவேங்கடமுடையானின் ஈடிணையற்ற கருணை என்னும் கற்கண்டு மலையாக மாறிவிட்டதாக வெகு அழகாக அனுபவித்துப் பாடியுள்ளார்.

மேலும், திருவேங்கடமுடையான் என்னும் உழவன் இத்திருவேங்கடமலையின் உச்சியில் அமர்ந்து கொண்டு இவ்வுலகெங்கிலும் தான் பயிரிட்டுள்ள பயிர்களாகிய தன் பக்தர்கள் செழிப் பாக வளர்ந்து வருவதைப் பார்வையிட்டு மகிழ்வதா கவும் ஸ்ரீவேதாந்த தேசிகர் கூறி நம்மை எல்லாம் நெகிழ வைக்கின்றார்.

இப்பரந்த பாரதபூமியின் சமவெளிகளில் எத்தனையோ திருத்தலங்கள் இருக்க ஏழுமலை களின் சேர்க்கையாகிய இத்திருமலையை நம் திருவேங்கடமுடையான் எதற்காகத் தேர்ந்து எடுக்க வேண்டும் என்று சற்றே யோசிப்போம்.

கிருத, திரேதா, துவாபர, கலி ஆகிய நான்கு யுகங்களிலும் இந்தக் கலியுகமே அறம் குறைந்து மறம் செழித்து வளரக் கூடியதாக இருக்கின்றது. பாவச் செயல்களைச் செய்வதற்கு இந்த யுகத்தைச் சேர்ந்த மக்கள் பலரும் எவ்விதத் தயக்கமும் கொள்ளமாட்டார்கள்.



**திருமலைக்குச் சென்றடைய இரண்டு மலை வழிச் சாலைகள் உள்ளன. அதில் ஒன்று வாகனங்கள் திருமலையைச் சென்றடையவும், இரண்டாவது வழி வாகனங்கள் திருப்பதிக்கு சென்று அடையவும் உபயோகத்தில் உள்ளன. மலைவழிச் சாலைகள் இயற்கை எழில் நிறைந்தவை. பசுமையான மரங்கள், அரிய வகை விலங்குகள் போன்றவற்றையும் உள்ளடக்கியது. மலைவழிச் சாலையில் செல்லும் போது கோவிந்த நாமத்தை உச்சரித்துக்கொண்டே செல்ல வேண்டும். இதைக் கருத்தில் கொண்டு தி.தி.தே. கோவிந்த நாமத்தை எழுத்து வடிவில் நமக்காக ஆங்காங்கே வைத்து உள்ளனர். இத்தகைய எழில் மிகு மலை வழிச் சாலையில் தேவையற்ற பொருட்களை வீசி அதன் எழிலை பாழ்படுத்தாமல் இருப்பது நமது கடமை.**

இந்தக் கலியுகத்தில் இப்படிப்பட்ட கோடிக்கணக்கான மனிதர்களின் கடைசிப் புகலிடம் திருவேங்கடம் மட்டுமே.

இதனால்தான் ***"கலௌ வேங்கட நாயக:"*** என்று நம் பெரியோர்கள் பக்தியுடன் கூறுகின்றனர். மழைக் காலத்திலும், குளிர்காலத்திலும் தத்தமது இருப்பிடத்திலேயே வசிக்கின்ற மக்கள், கோடைக்காலம் வந்து விட்டால் இதம் தரும் மலைவாசஸ்தலங்களுக்குச் சென்று அங்குள்ள குளிர்ந்த சீதோஷ்ணநிலையை அனுபவிப்பதைப் பார்க்கிறோம் அல்லவா?

நம்மைப் போன்ற கோடிக்கணக்கான கலியுகத்து மாந்தர்களெல்லாம் நமது பாவங்களை எல்லாம் போக்கிக் கொள்ளவே திருவேங்கடமுடையானைச் சாரை சாரையாகச் சென்று சேவிக்கின்றோம். நாம் அனைவரும் சுமந்து செல்லும் எண்ணற்ற பாவங்கள் உருவாக்கும் வெப்ப அலை அத்திருவேங்கடமுடையானின் திருமேனிக்கு ஊறுவிளைவிக்குமல்லவா? அப்பெருமான் தனது திருமேனியின் வெப்பத்தைத் தணிப்பதற்காகவே இத்திருமலையில் எழுந்தருளியிருக்கின்றான்.

"அது எப்படி? அனைத்தையும் கடந்த பரம் பொருளாகிய எம்பெருமானையும் வெப்பம் வாட்டுமா? இதை எப்படி நம்புவது?" என்ற கேள்வி எழத்தான் செய்யும்.

ஸ்ரீவேதாந்த தேசிகருக்கு முற்பட்டவராகிய நடாதூர் அம்மாள் என்ற ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யபுருஷர் காஞ்சீபுரத்தில் வசித்து வந்தார். அங்குள்ள ஸ்ரீவரதராஜப் பெருமாள் திருக்கோயிலில் அவர் காலட்சேபம் சாதித்து வந்த நேரத்தில் திருக்கோயில் பரிசாரகர்கள் பெருமாளுக்கு அமுது செய்விப்பதற்காகச் சூடான பாலை எடுத்துச் சென்றதைப் பார்த்த அம்மஹான், "இவ்வளவு சூடாகச் சமர்ப்பித்தால் எம்பெருமானின் திருவாயில் புண் வந்துவிடாதோ? இப்பாலை நன்கு ஆற்றிச் சூட்டைக் குறைத்து அதன் பின்பு பெருமாளுக்கு அமுது செய்வியுங்கள்! என்று தாயன்புடன் கூறினார். எனவேதான் அவர் ஸ்ரீதேவப் பெருமாளுக்கே தாயார் என்ற நிலையில் வைத்து ஸ்ரீநடாதூர் அம்மாள் என்று போற்றப்படுகின்றார்.

எம்பெருமானுடைய திருமேனியைச் சுகுமாரமான, மிருதுவான திருமேனி என்றே நம் பெரியவர்கள் அனுபவிப்பது வழக்கம். அவருக்குச் செய்யும் பூஜைகள் முதலிய உபசாரங்களை "ராஜ குமார சுச்ருஷை" (ஓர் இளவரசனுக்குச் செய்யப்படும் உபசாரங்கள்) என்பதாகவே செய்யப்பட வேண்டும் என்பது நம் பெரியோர்கள் வகுத்த மரபு.

இவ்விதம் பார்க்கும் பொழுது, நம் திருவேங்கடமுடையானின் சுகுமாரமான, மிருதுவான திருமேனியும் நம்முடைய பாவங்கள் உண்டாக்கும் வெம்மையால்



திருப்பாணாழ்வார் **"மந்திபாய் வடவேங்கட மாமலை"** என்று அனுபவிக்கின்றார். திருமங்கையாழ்வாரோ, **"பொங்குநீர்ச் செங்கயல் திளைக்கும் சுனைத்திருவேங்கடம்"** என்றும், **"வாச மா மலர் நாறு வார் பொழில் சூழ்தரும் உலகுக்கெல்லாம் தேசமாய்த் திகழும் மலைத் திருவேங்கடம்"** என்றும் புகழ்ந்து பாடி உள்ளனர். குலசேகராழ்வாரும் தாம் அருளிய பெருமாள் திருமொழியில், **"தேனார் பூஞ்சோலைத் திருவேங்கடம்"**, **"பண்பகரும் வண்டினங்கள் பண்பாடும் வேங்கடம்"**, **"எம்பெருமான் ஈசன் எழில்வேங்கட மலை"**, **"வெறியார் தண்சோலைத் திருவேங்கடமலை"**, **"தென்னவென வண்டினங்கள் பண்பாடும் வேங்கடம்"** என்றெல்லாம் பாடி உள்ளார்.

பாதிக்கப்படத்தானே செய்யும்? இந்நிலையில், என்றென்றும் இதமான சீதோஷ்ண நிலைமையைக் கொடுக்கும் திருமலையின் உச்சியில் நம் திருவேங்கடமுடையான் நித்யவாஸம் செய்துவருவது பொருத்தமாகவே உள்ளது.

ஏழுமலைகளை உள்ளடக்கிய இப்புனிதமான திருமலையின் சூழ்நிலையை ஸ்வாமி நம்மாழ்வார், ***"சிந்து பூ மகிழும் திருவேங்கடம்"*** என்றும், ***"தெண்ணிறைச் சுனைநீர்த் திருவேங்கடம்"*** என்றும் பாடியுள்ளார். நம் ஆழ்வார்களும் ஆசாரிய புருஷர்களும் திருவேங்கடமுடையானைப் புகழ்ந்து பாடியதைப் போலவே, அப்பெருமான் எழுந்தருளியிருக்கும் இத்திருமலையில் உள்ள சோலைகள், சுனைகள், இத்திருமலையை வண்ணங்களால் போர்த்தியது போன்ற மணம் மிகுந்த மலர்க்கூட்டங்கள், இதனை இதமாகத் தழுவிச் செல்லும் மேகக் கூட்டங்கள், இங்கே நிலவும் இயற்கை எழில்மிகுந்த சூழலை ஆனந்தமாக அனுபவித்துத் திளைக்கும் பல்வேறு உயிரினங்கள் ஆகியவற்றின் சிறப்பையும் வெகுவாகப் புகழ்ந்திருப்பதைப் பார்க்கின்றோம்.

எம்பெருமானாகிய நம் திருவேங்கடமுடையானின் திருமேனியும் திருவுள்ளத்தையும் குளிர்வித்து மகிழ்விக்கும் இப்புனிதமான திருமலைக்கு வந்து செல்லும் பக்தர்கள் அனைவரும், இத்திருமலையின் தூய்மையையும், புனிதத் தன்மையையும் காப்பதைத் தங்களின் பொறுப்பாகக் கருத வேண்டும்.

புகழ் மிக்க புனிதமான பல அருவிகளையும், இயற்கை எழிலையும், மண் வளத்தையும், இருப்பிடமாகக் கொண்டு உயிர் வாழும் அறிய வகை உயிரினங்களையும் காப்பது நம் தலையாய கடமையாகும். எனவே, வளம் நிறைந்த இப்புனிதமான திருமலையின் மண்வளத்தைப் பாதிக்கின்ற நெகிழிப் பொருட்களையும், தேவையற்ற பொருட்களையும் இத்திருமலைக்குக் கொண்டு வருவதையும், திருமலையிலும், மலை வழிச் சாலைகளிலும், நடை பாதைகளிலும் அலட்சியமாக வீசிச் செல்வதையும் தவிர்க்க வேண்டும்.

ஏழுமலையான் எழுந்தருளியுள்ள இத் திருமலையை நாம் ஒவ்வொருவரும் நமது வீட்டின் பூஜை அறையைப் போன்று பராமரிக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்வோம். திருமலையில் நாம் கடைப்பிடிக்கும் தூய்மையே திருவேங்கடமுடையானுக்கு நாம் செலுத்தும் உன்னதமான காணிக்கை என்பதைப் புரிந்து கொள்வோம்.

# புரட்டாசியில் பெருமாள் வழிபாடு ஏன்?

- திரு. ஜி.வேலாயுதம், சேலம்,98437 50345.

புரட்டாசி மாதம் பெருமாளுக்கு உகந்த மாதமாகப் போற்றப்படுகிறது. அதுவும் புரட்டாசி சனிக்கிழமையில் பெருமாளை வழிபட்டால் கூடுதல் பலன் கிடைக்கும். இந்த மாதத்தில் அசைவ உணவுகளைத் தவிர்த்து சைவ உணவுகளை உண்பவர்களின் எண்ணிக்கை ஏராளம்.

நவக்கிரகங்களில் புதன் கிரகத்திற்குரிய மாத மாக இருப்பது புரட்டாசி, புதன் கிரகத்தின் அதி தேவதையாக இருப்பவர் மகாவிஷ்ணு. எனவே தான் புதன் கிரகத்தின் அருளைப் பெற விஷ்ணுவின் வழிபாடு புரட்டாசியில் உகந்ததாக இருக்கிறது. மகாவிஷ்ணு எனப்படும் பெருமாளின் அம்சமா கவே கருதப்படும் புதனுக்குரிய வீடு கன்னி ராசி. இந்த ராசியில் சூரியன் அமர்வதும் புரட்டாசி மாதத் தில்தான். எனவே இந்த மாதத்தில் பெருமாளுக்கு பஜனைகள் செய்து வழிபடுவது, ஆலயங்களில் உற்சவங் கள் நடத்துவது போன்றவை செய் யப்படுகின்றன. புதன் கிரகத்திற்கு நட்பானவர் சனி பகவான். அதனால் தான் புரட்டாசி மாதத்தில் வரும் சனிக்கிழமைகள், பெருமாள் வழிபாட்டிற்கு கூடுதல் சிறப்புக் குறியதாக இருக் கின்றது.

புரட்டாசி மாதத்தை எமனின் கோரைப் பற்க ளுள் ஒன்றாக அக்னி புராணம் கூறுகிறது. எமபயம் நீங்கவும், துன்பங்கள் விலகவும் புரட்டாசி மாதத்தில் காக்கும் கடவுளான விஷ்ணுவை வணங்குவது சிறப்பு.

ஒவ்வொரு மாதமும் சனிக்கிழமைகளில் பெருமாளை நினைத்து விரதம் கடைபிடிப்பது நல்லது. அது முடியாதவர்கள் புரட்டாசி மாதத்தில் வரும் சனிக்கிழமைகளிலாவது, பெருமாளுக்குரிய பூஜைகளை செய்து வழிபடுவதோடு அன்னதானம் செய்து வந்தால் பெருமாளின் பரிபூரண அருள் கிடைக்கும்.

புரட்டாசி மாத சனிக்கிழமைக்கென மேலும் ஒரு விசேஷம் இருக்கிறது. புரட்டாசி சனிக்கிழமை யில்தான் சனி பகவான் அவதரித்தார். அதன் காரணமாக அவரால் ஏற்படும் கெடுபலன் கள் குறைய, காக்கும் கடவுளான திருமாலை வணங்குவது வழக்கத்தில் வந்தது என்பது ஐதீகம்.

யம பயம் நீங்கவும், சனி யின் கெடுபலன் நீங்கவும் நாள்தோறும் பெருமாளை வழிபாடு செய்வதோடு, கோவிந்த நாமம், விஷ்ணு சஹஸ்ர நாமம் பாராய ணம் செய்ய லாம்.



# திருமலையப்பனின் மகிமை

திருமலையப்ப ஸ்வாமியின் கருணை சொல்லில் அடங்கா. திருமலையில் கடந்த வருடம் 27–09–2022 முதல் 05–10–2022 வரை நடைபெற்ற பிரம்மோத்ஸவத்தில் திருமலையப்பன் பற்பல வாகனங்களில் வந்து பக்தர்களுக்கு அருள் புரியும் அழகைச் சேவிக்கும் ஆவலினாலும், கோவர்த்தன கிரி விடுதியில் பாகவதோத்தமர்கள் சேவிக்கும் திவ்யப் பிரபந்த சேவையில் அடியேனும் கலந்து கொள்ளும் ஆசையினாலும் அடியேன் 29–09–2022 மாலை திருமலைக்குச் சென்று பிரபந்த கோஷ்டியினருடன் இணைந்தேன்.

30–09–2022 மற்றும் 01–10–2022 ஆகிய இரு நாட்களும் திருமலையப்பனையும் சேவித்து பிரபந்த சேவையிலும் கலந்து கொண்டு பாசுரங்களைச் சேவித்து மகிழ்ந்தேன். 01–10–2022 அன்று கருட வாகன சேவை என்பதால் பக்தர்களின் கூட்டம் திருமலையில் அலைமோதியது.

அதனால் திருமலையப்பனை தொலைக்காட்சியின் வாயிலாக சேவிக்கலாம் என எண்ணி அறையிலேயே தங்கி விட்டோம். அன்று இரவு குளிர் அதிகமாக இருந்ததால் அடியேன், குளிருடன் காய்ச்சல் கண்டு மிகவும் சிரமப்பட்டேன். மறுநாள் அதிகாலை அடியேனால் எழ முடியவில்லை. அடியேனின் நிலையைக் கண்ட பிரபந்த கோஷ்டியினர் அடியேனை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை அளித்து அறைக்கு அழைத்து வந்தனர்.



ஓரளவே குணமான அடியேன் அங்கிருந்தால் கோஷ்டியினருக்கு சிரமம் அளிக்க நேரிடும் என ஊருக்குக் கிளம்பினேன். கோஷ்டியினர் அடியேனை திருப்பதி பேருந்தில் ஏற்றி விட்டனர். திருப்பதி பேருந்து நிலையம் வந்து இறங்கிய அடியேன் ஆகாரம் உட்கொள்ளாமல் பயணித்ததால் மிகவும் களைப்படைந்தேன்.

பேருந்து நிலையம் முழுவதும் மக்கள் வெள்ளம். முண்டியடித்துக் கொண்டு பேருந்தில் மக்கள் ஏறுவதைக் கண்ட நான் மேலும் சோர்வடைந்தேன். அச்சமயம்தான் அந்த அதிசயம் அரங்கேறியது.

பேருந்திலிருந்து தள்ளாடி நடந்து வந்த 71 வயதான அடியேனை ஒரு தம்பதியினர் வரவேற்று அமரச் செய்து பிஸ்கட் மற்றும் தேநீர் கொண்டு வந்து கொடுத்து உபசரித்தனர். தேனீரை அருந்திக் கொண்டிருக்கும்போதே அடியேன் செல்ல வேண்டிய செய்யார் பேருந்து வந்து கொண்டிருந்தது.

மக்கள் பேருந்து நிற்பதற்குள் முண்டியடித்துக் கொண்டு ஏறுகின்றனர். அடியேனை உபசரித்தவர் ஓடிச் சென்று பேருந்தில் ஏறி சிரமப்பட்டு ஓர் இடம் பிடித்து என்னை அழைத்து அமர வைத்தார். சுமார் ஒரு மணியளவில் கிளம்பிய பேருந்து மாலை 5.30 மணியளவில் செய்யார் வந்தடைந்தது. அதுவரை அடியேன் எங்குள்ளேன் என்கிற நினைவே இல்லாமல் பயணித்தேன்.

காட்டில் வழி தெரியாமல் தத்தளித்துக் கொண்டிருந்த பகவத் ராமானுஜரை திவ்ய தம்பதிகளாக தேவப்பெருமான் வந்திருந்து காஞ்சிபுரத்தில் சேர்த்ததைப் போலவே, அடியேனையும் மலையப்பனான ஸ்ரீநிவாசனும் அலர்மேல்

மங்கை தாயாரும் அழைத்து வந்ததாகவே உணர்கிறேன். அடியேன் பக்தியில் சிறந்தவனல்ல. மிகமிகச் சாதாரணமானவன். நீசன். அவ்வாறான அடியேனையும் சிரமமில்லாமல் அடியேனின் குடிலில் சேர்ப்பித்த திருமலையப்பனின் செயல் கருணையா! பரிவா! பாசமா! வாத்சல்யமா! அல்லது அடியேனின் பக்தியா! என அடியேனின் மீது திருமலையப்பன் இவ்வளவு அக்கறை கொண்டுள்ளான் என்பது அடியேனுக்கு ஆச்சர்யத்தையும் ஆனந்தத்தையும் தருவதோடு ஓர் உண்மையை உணர்கிறேன்.

அவனைச் சரணடைந்த அனைவரையும் ரட்சித்துக் காப்பதாக உறுதி கொண்டுள்ளான் என்பது புலனாகிறது. மேலும் திருமலைக்கு வந்த அனைவரும் மகிழ்ச்சியுடன் சிரமமில்லாமல் அவரவர் இல்லத்திற்குச் சென்று சேர்ப்பதில் திருமலையப்பன் கொண்டுள்ள சங்கல்பத்தை நினைந்து நெஞ்சம் நெகிழ்கிறது.

**– திரு. கிருஷ்ணமூர்த்தி ராமாநுஜதாசன்,**
**செய்யார், 97892 59696**

# நாத நீராஜன மண்டபம்




**திருமலையில் ஆலயத்தின் தென்கிழக்கு திசையில் நாதநீராஜன மண்டபம் அமைந்துள்ளது. இந்நாதநீராஜன மண்டபத்தில் நாள்தோறும் ஆன்மீக நிகழ்ச்சிகள் பல நடந்தவண்ணம் இருக்கும். இந்நாதநீராஜன மண்டபத்தில் பஜனைகள், சொற்பொழிவுகள், நடனம், பரத நாட்டியம், நாடகங்கள் போன்ற ஆன்மீக நிகழ்ச்சிகள் நடைபெறும்.**

**பக்தர்கள் எம்பெருமானை தரிசித்த பின்பு சிறிது நேரம் ஓய்வு பெறும் நோக்கத்தில் ஆலய சுற்றுப்புறத்தில் அமர்ந்து இந்த நிகழ்ச்சிகளைப் பார்க்கலாம். இந்த நிகழ்ச்சிகளை எஸ்.வி.பி.சி. தொலைக்காட்சி நேரலையாகவும், தொகுப்பு நிகழ்ச்சியாகவும் ஒளிப்பரப்பு செய்கிறது. இதன் மூலம் நாம் உலகத்தில் எந்த மூலையில் இருந்தாலும் நாத நீராஜன மண்டபத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளை கண்டு தரிசிக்கலாம். யக்ஷ காணம், சுந்தர காண்ட பாராயணம், கருட புராணம் போன்ற பலவகைப்பட்ட நிகழ்ச்சிகளையும் தி.தி.தே. தர்ம பிரசார பரீஷத் ஏற்பாடு செய்து நடத்தி வருகிறது. இந்நிகழ்ச்சிகளில் ஆன்மீகத்தில் சிறந்த நபர்கள்,வேத பண்டிதர்கள், தி.தி.தே.யின் உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்துக் கொண்டு ஆன்மீக உரையாற்றுவர்**










# ஏழுமலையானை தரிசனம் செய்வது எப்படி?




எந்த இடையூறும் தடையும் இல்லாமல் பெருமாளைத் தரிசனம் செய்வது எப்படி? என்பதற்கான விவரங்கள் இங்குக் காணலாம்.

அக்காலத்தில் திருப்பதிக்கு யாத்திரை செல்ல வேண்டும் என்றால் அது ஒரு பெரிய விஷயமாக இருந்தது. இன்றைய காலக்கட்டத்தில் எளிதாக பெருமாளைச் சேவிக்க முடிகிறது என்று எண்ணுகிறோம். ஆனால் பெருமாளைத் தரிசனம் செய்வது என்பது அவ்வளவு எளிதானதல்ல. நம் வீட்டின் அருகில் இருக்கும் கோயிலில் தரிசனம் செய்வது எளிதான ஒன்று. ஆனால், நாம் நினைத்தாலே ஸ்வாமி தரிசனம் கிடைக்கும் என்பது இல்லை. பெருமாள் நினைத்தால் மட்டும்தான் நாம் அவரை தரிசனம் செய்ய இயலும் என்ற ஒரு கூற்றும் முன்னோர்களால் நமக்குச் சொல்லப்பட்டுள்ளது. நிறைய பேருக்கு திருப்பதி செல்வதற்கு நேரம் காலம் எளிதில் கைகூடி வராது.

எப்பொழுதெல்லாம் திருப்பதி யாத்திரை செல்ல வேண்டுமென்று நினைத்தாலும் ஏதாவது தடை வரும். எந்தத் தடையும் இல்லாமல் திருப்பதி பெருமாளை எப்படி தரிசனம் செய்வது என்று பார்ப்போம்.

திருப்பதி பெருமாளைத் தரிசனம் செய்ய நேரமும் காலமும் கைகூடி வர வேண்டும் என்றால், ஒரு சிறிய மண் உண்டியலை வாங்கி, அந்த உண்டியலுக்கு மேலே ஒரு திருநாமத்தை போடுங்கள். அதில் தினந்தோறும் ஒரு ரூபாய் செலுத்தி வாருங்கள். பெருமாளே உன்னை தரிசனம் செய்யும் பாக்கியம் எனக்கு கிடைக்க வேண்டும். திருமலைக்கு வந்து உன்னைக் காணக் கூடிய பாக்கியத்தை எனக்குத் தர வேண்டும். "கோவிந்தா கோவிந்தா" என்று உச்சரித்து தினம்தோறும் வேண்டிக் கொள்ளுங்கள். திருப்பதிக்கு செல்லக்கூடிய வாய்ப்பு வந்ததும் நீங்கள் சேகரித்து வைத்த உண்டியல் பணத்தை அப்படியே திருப்பதி உண்டியலில் சேர்த்து விடுங்கள். (இப்படி வேண்டிக் கொண்டால் விரைவில் பெருமாளை பார்க்கக்கூடிய பாக்கியம் உங்களுக்கு கிடைக்கும்.)

## திருப்பதிக்கு முறையாக எப்படி யாத்திரை செல்ல வேண்டும்

வீட்டிலிருந்து கிளம்பும்போது பூஜையறையில் ஒரு தீபம் ஏற்றி வைத்து விடுங்கள். அதன் பின்பு வெற்றிலை

- திரு. எம். அசோக் ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி, 97503 33265.

பாக்கு வாழைப்பழத் தாம்பூலத்தை பூஜை அறையில் வைத்து விட்டு, தடங்கல் இல்லாமல் ஏழுமலையான் தரிச னத்தைப் பெற வேண்டுமென்று மனதார எம்பெருமானை வேண்டிக் கொண்டு வீட்டிலிருந்து யாத்திரைக்குப் புறப்பட வேண்டும். யாத்திரைக்குப் புறப்படும்போது ஏற்றிய தீபத்தை மறக்காமல் மலை ஏற்றி விடுங்கள்.

### திருமலைக்குச் செல்லும்போது கடைபிடிக்க வேண்டிய பொது வழிகள்

திருமலை பயணத்தின் போது ஆகாரத்தில் கட்டுப் பாட்டோடு இருப்பது நல்லது. வெங்காயம், பூண்டு சாப்பிடுபவர்கள் கூட யாத்திரையின்போது தவிர்த்திடுங்கள். கலாச்சாரத்தை அனுசரித்து உடை அணிவது சிறந்தது. ஆணாக இருந்தால் வேட்டி, குர்தா, பெண்கள் புடவை அல்லது துப்பட்டாவுடன் கூடிய உடை அணியுங்கள். புஷ்ப மண்டபமான திருமலையில் அனைத்து மலர்களும் எம்பெருமானுக்கு உரியது என்பதால் தலையில் எவ்வித மலரையும் வைத்துக் கொள்வதை தவிர்த்திடுங்கள். தேவையற்ற பேச்சைக் குறைத்து இறைவன் நாமத்தை துதித்தபடி செல்லலாம்.

திருப்பதிக்கு போகும்போது முதலில் அலர்மேல் மங்கை தாயாரை தரிசனம் செய்து விட்டு தான் மேல் திருப்பதிக்குச் செல்ல வேண்டும். கீழே தாயாரிடம் முதலில் உங்களுடைய மனக் கவலைகளைச் சொல்லி விடுங்கள். தாயார் எல்லா விஷயங்களையும் பெருமாளிடம் சொல்லி உங்களுடைய கஷ்டங்களை தீர்த்து வைப்பார். தாயாரை தரிசனம் செய்யாமல் திருமலைக்குச் சென்று பெருமாளை தரிசனம் செய்வது முழு பலனை நமக்குக் கொடுக்காது. திருச்சானூரில் இருக்கும் தாயாரை தரிசனம் செய்துவிட்டு அடுத்து திருமலையை ஏற வேண்டும்.

பாதயாத்திரையாக மலையேறினாலும் சரி, வாகனத் தில் சென்றாலும் சரி மலைக்கு மேலே ஏறும்பொழுது "ஓம் நமோ வேங்கடேசாய!", "ஓம் நமோ நாராயணாய!" என்ற பெருமாளின் நாமத்தை உச்சரித்துக் கொண்டே செல்ல வேண்டும்.

### திருமலையில் தரிசனம் செய்யும் முறை

மலை மேல் சென்றதும் கோயிலுக்குள் செல்லும் முன் ஸ்வாமி புஷ்கரணி எனப்படும் குளத்தில் குளிப்பது நல்லது. முடியாதவர்கள் குளத்தில் இருக்கும் தீர்த்த தண்ணீரை எடுத்து உங்களுடைய தலையில் ப்ரோக்ஷணம் செய்து கொள்ளுங்கள். அதாவது மூன்று முறை தலையில் தண்ணீரைத் தெளித்துக் கொள்ளுங்கள். நீராடிய பின்




**திருமலைக்கு வாகனங்கள் வழியாக திருமலையைச் சென்றடைய இரண்டு மலை வழிச்சாலைகள் உள்ளன என்பது அனைவரும் அறிந்ததே. திருமலைக்கு பேருந்து பயணமே பாதுகாப்பானது. பக்தர்கள் கூடுமானவரை பேருந்து பயணத்தை மேற்கொள்ளுங்கள்.**

**ஆந்திர மாநில பேருந்துகளில் திருமலைக்கு சென்று திரும்பி வருவதற்கு ஒரே பயண டிக்கெட்டு எடுத்தால் பயணச் சலுகை அளித்துள்ளார்கள்.**

**டிக்கெட் மூன்று நாட்கள்(72 மணி நேரம்) வரை மட்டுமே செல்லுபடியாகும்.**

**மூத்த குடிமக்களுக்கு ஆதார் அட்டையினை காண்பித்தால் டிக்கெட்டில் சலுகை கிட்டும்.**



நெற்றியில் அவரவர்கள் குலாச்சாரப்படி குறியீடு செய்து கொள்ளுதல் முக்கியம்.

அடுத்து குளத்தின் கரையில் இருக்கும் ஆதி வராகப் பெருமாள் சன்னதிக்குச் சென்று சேவிக்க வேண்டும். முதலில் இவரைச் சென்று வணங்குவதன் காரணம், திருமலை வராக தலமாகும். அங்கு பெருமாள் குடியிருப்பதால் முதல் தரிசனம், வேண்டுதல் முதலில் வராக ஸ்வாமிக்கு என்பது வழக்கம். இங்கே போக நேரம் இல்லை என்றால் ஸ்வாமி ஆலயத்திற்குள் உள்ள தூணில் இருக்கும் ஆதிவராகரை சேவித்துக்கொள்ளலாம்.

வராகர் சன்னதி முடிந்ததும் கோயிலுக்குள் நேராகச் செல்வது இன்றைய காலக்கட்டத்தில் முடியாத ஒன்று. வரிசையில் நின்றாலும் கோயிலின் பிரதான நுழைவுவாயில் வந்ததும் முதலில் காணப் படும் துவஜஸ்தம்பம் முன்பே கீழே விழுந்து சேவிக்கவும். ஆண்கள் மட்டும் நெடுஞ்சாண்கிடை யாகவும், பெண்கள் மண்டியிட்டும் சேவிக்கணும். இங்கே உள்ள பலி பீடத்தையோ கொடிக் கம்பத் தையோ எக்காரணம் கொண்டும் தொடக் கூடாது. இது எல்லாக் கோயில்களுக்கும் பொது.

துவஜஸ்தம்பத்தைக் கடந்தபின் கீழே விழுந்து சேவிக்கலாகாது. இதுவும் எல்லா கோயிலுக்கும் பொருந்தும். வரிசையில் நிற்பதால் ஒரு வேளை இது முடியாது போனால் இருந்த இடத்திலிருந்து கையால் கும்பிடலாம். வரிசை வளைந்து இடதுபக்கம்

## ஸ்ரீவேங்கடேஸ்வரா பக்தி சேனல்

தி.தி.தே.

ஸ்ரீவேங்கடேஸ்வரா பக்தி சேனலானது திருமலையின் ஏழு மலைகளின் அரசனான திருவேங்கடவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு முக்கிய ஆன்மீகச் சேனலாகும். முதன் முதலில் எஸ்.வி.பி.சி. சேனலானது தெலுங்கு மொழியில் முதன்மையாக ஒளிபரப்பப்பட்டு வந்தது. அதன் பின்னர் அண்டை மாநில மொழிகளான தமிழ், கன்னடம் மட்டுமல்லாமல் இந்தியிலும் சேனல்கள் ஏற்படுத்தப்பட்டு அந்தந்த மொழிகளிலே ஒளிபரப்பப்பட்டு வருகின்றது.







உலகம் முழுவதிலிருந்து பக்தர்கள் பலர் திருமலைக்கு தங்களால் வர இயலவில்லையே எனும் மனக்குறை இல்லாமல் திருமலையப்ப ஸ்வாமியே தமது இல்லத்திற்கு வந்து அருள் புரியும் விதத்தில் திருமலையில் நடக்கும் நிகழ்ச்சிகளை நேரலையாக காணும் வாய்ப்பினை தி.தி.தே.வின் எஸ்.வி.பி.சி. சேனல் நமக்கு அளிக்கிறது.

இந்தச் சேனலில் நேரலை ஒளிப்பரப்பு மட்டுமின்றி சனாதான கலாச்சாரத்தின் ஒரு அங்கமான இசை, நடனம், நாட்டியம், நாடகம், சமயக் கருப்பொருள்கள் அடங்கிய தொடர்கள், நமது திருத்தலம் என்ற வரிசையில் இதர ஆலயங்களின் விவரங்கள் போன்ற வற்றோடு, திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் ஆலயம், திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஆலயம் மற்றும் தி.தி.தே. ஆலயங்களில் நடைபெறும் சிறப்பு நிகழ்வுகளையும் நேரலையாகவோ, தொகுப்பு நிகழ்ச்சிகளாகவோ காட்சியமைத்து ஒளிபரப்பி வருகிறது.



## திருமலை நடைபாதை

**அன்றைய காலக்கட்டத்தில் திருமலைக்குச் செல்ல வேண்டுமெனில் அடர்ந்த காட்டுவழியில் நடந்தே செல்ல வேண்டும். அதுவும் கரடுமுரடான ஒற்றையடிப்பாதையாக இருந்தது. பின்னர் பக்தர்களின் சிரமத்தைக் குறைப்பதற்காக தி.தி.தே. படிகள் அமைத்தன. படிகள் அமைக்கப்பட்டாலும் மழைக்காலங்களிலும், கோடைக் காலங்களிலும் மலை ஏறுதல் என்பது கடினமாகவே இருந்தது. இதனை கருத்தில் கொண்டே தி.தி.தேவஸ்தானம் படிகளோடு மேற்கூரைகளையும், தாகம் தீர்க்க குடிநீர் வசிதிகளையும் அமைத்தது. பக்தர்களும் இன்று நடைபாதையில் அமைந்துள்ள இயற்கை சூழலை ரசித்தபடியே திருமலைக்கு நடந்துச் சென்று திருவேங்கடமுடையானை தரிசிக்கின்றனர்.**

செல்லும். அங்கே வரதர் சன்னதி இருக்கும். வரிசையில் இருந்தாலும் இவரை சேவித்துச் செல்லலாம். அங்கிருந்து பெருமாளின் கர்ப்ப க்ருஹத்தின் முன் மண்டபம் வழியாகச் செல்ல வேண்டும். உள்ளே உள்ள ஒரு தூணில் புஷ்கரணிக் கரையில் உள்ள வராகர் கோயிலில் உள்ளது போலவே வெளியில் சேவிக்கத் தவறின ஆதி வராகர் இருப்பார்.

அவரையும் சேவித்து விட்டு பெருமாளின் முன் எப்போதும் நிற்கும் கருடாழ்வாரையும் வணங்கி விட்டு சன்னதிக்குள் செல்ல வேண்டும். சில சமயம் அதிகக் கூட்டம் என்றால் வெளியில் இருந்தே திருப்பி விடுவார்கள். எப்படியும் துவாரபாலகர் வரை போகலாம். சன்னதிக்குள் நுழையும் முன் வாசலில் இருக்கும் துவார பாலகர்கள் இருவரையும் கை கூப்பி வணங்கி உள்ளே நுழைய அனுமதி கோர வேண்டும். இதை மனதால் செய்தால் போதும். அதன் பிறகு தான் பெருமாளிடம் சென்று உங்களுடைய வேண்டுதலை வைக்க வேண்டும். பெருமாளிடம் சென்று நம்முடைய கோரிக்கையை வைக்கும் அளவிற்கு தரிசன நேரம் நிச்சயமாகக் கிடைக்காது. பெருமாளை இரண்டு கண்களால் கண் குளிர பார்ப்பது என்பதே கொஞ்சம் கஷ்டம்தான். இருந்தாலும் மனதை ஒரு நிலைப்படுத்தி கொண்டு பெருமாளை பார்க்கும் போது முதலில் அவருடைய திருவடிகளைக் காண வேண்டும். திருப்பாதங்களைப் பார்த்தவுடன், அதன் பின்பு அவருடைய திருமார்பில் குடி கொண்டிருக்கும் மஹாலக்ஷ்மி தாயாரைக் காண வேண்டும். அதன் பின்பு பெருமாளைத் தரிசனம் செய்ய வேண்டும்.

இவை அனைத்தும் ஒரு சில வினாடிகளில் நடக்க வேண்டுமென்பதால் கொஞ்சம் சிரமம் தான். இருப்பினும் கொஞ்சம் முன்கூட்டியே உங்களை அதற்காகத் தயார் படுத்திக் கொண்டு, பெருமாளை தரிசனம் செய்ய செல்லுங்கள். பெருமாளை தரிசனம் செய்து முடித்து விட்டீர்கள். ஆனால் அவரிடம் வேண்டுதலை வைக்க முடிய வில்லை. என்ன செய்வது? கோயில் பிராகாரத்தில் ஏதாவது ஒரு இடத்தில் அமர்ந்து உங்களுடைய வேண்டுதலைச் சொன்னாலும் அது அந்தப் பெருமாள் திருச்செவிகளில் விழும்.

பெருமாளின் தரிசனம் முடித்து வெளியில் வந்தால் இடது கோடியில் மடப்பள்ளி இருக்கும். அங்கே உள்ள மடப்பள்ளியை மேற்பார்வையிடும் வகுளாதேவி (ஸ்ரீநிவாசப் பெருமாளின் தாயார், யசோதையும் இவரே) இருப்பார். அவரை கண்டிப்பாக சேவிக்கணும். வகுளாதேவி தரிசனம் முடித்ததும் தீர்த்தம் சடாரி சாதிப்பார்கள். அது முடிந்து பிராகாரத்தை வலம் வந்தால் ஒரு இடத்தில் எல்லாரும் படியில் ஏறி ஏறிப் பார்ப்பார்கள்.

நீங்களும் பாருங்கள். விமானத்தின் மேலே (தங்க விமானத்தில் வெள்ளியால் ஒரு பிரபை இருக்கும்) விமான வேங்கடேசர் எழுந்தருளி இருப்பர். அவரையும் வணங்கி விட்டு வந்தால் ஆலயத்தின் உண்டியல். உண்டியலில் காணிக்கையைச் செலுத்தி விட்டு எதிரில் உள்ள இராமாநுஜர் சன்னதி, அருகிலேயே யோக நரசிம்மர் சன்னதியையும் சேவித்து விட்டு வெளியில் வரலாம். சுருக்கமாகக் கூற வேண்டும் என்றால் கோயிலுக்குள் சென்று விட்டால், நாம் ஒன்றுமே செய்ய வேண்டாம். பக்தர்களின் கூட்டமே நம்மை வழி நடத்திச் சென்று விடும்.

நடுவில் பிரசாத வரிசையில் கையில் பிரசாதம் கொடுப்பார்கள். பெருமாளின் தரிசனத்தை நிறைவு செய்த பிறகு மலையில் இருந்து கீழே இறங்கி வந்து அடிவாரத்தில் உள்ள ஸ்ரீகோவிந்தராஜரை பார்த்து, பெருமாளை தரிசனம் செய்ததற்காக நன்றிகளைத் தெரிவிக்க வேண்டும். அதன் பின்பு மீண்டும் வீடு திரும்பலாம்.வீட்டிற்கு வந்தவுடன் அடுத்த நாள் காலை வீட்டினைச் சுத்தம் செய்து விட்டு, குளித்து விட்டு பூஜை அறையில் தீபம் ஏற்றி வைத்து விட்டு நல்லபடியாக திருமலைக்குச் சென்று வந்ததற்காக அந்த பெருமாளுக்கு நன்றிகளை தெரிவித்து, வெற்றிலை பாக்கு பழங்களை வைத்து இருக்கிறீர்கள் அல்லவா அதை எடுத்து அருகில் இருக்கும் கோயிலுக்குச் செல்ல வேண்டும். உங்களுடைய வீட்டின் அருகில் அமைந்திருக்கும் ஆலயத்திற்குச் சென்று, உங்களால் முடிந்த தொகையை 11 ரூபாயோ, 51 ரூபாயோ வைத்து அந்த கோயிலில் இருக்கும் ஸ்வாமிக்கு இதைக் கொடுத்து விட வேண்டும். இத்தாம்பூலத்தை அந்தக் கோயிலில் இருக்கும் புரோகிதருக்கு கொடுத்தாலும் நல்லதுதான்.


இவ்வாறு முறையாகத் திருப்பதிக்குச் சென்று தரிசனம் செய்து வந்தால் நமக்குக் கிடைக்கக்கூடிய பலன் நிச்சயம் இரட்டிப்பாகக் கிடைக்கும். பெரும்பாலும் யாரும் இதைப் பின்பற்றுவது கிடையாது. நேரடியாக மேல் திருப்பதி செல்கிறார்கள். பெருமாளை சேவித்து விட்டு வீட்டிற்கு வந்து விடுகிறார்கள்.இதில் எந்த ஒரு தவறுமில்லை என்றாலும் மேலே கூறப்பட்டுள்ள முறைப்படி பெருமாளை தரிசனம் செய்து வருவதே சிறந்தது.




**திருமலையில் இலவசமாக ஆர். ஓ. முறைப்படி குடிநீர் வசதி செய்து ஆங்காங்கே நிறுவி பக்தர்க ளின் தாகம் தீர்ப்பதற்காகக் கொண்டு வந்ததே "தி.தி.தே. ஜலப்பிரசாத திட்டம்" ஆகும். பக்தர்களின் வசதிக் காக திருமலையில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் அனைத்து இடங்களிலும் கிடைக்கும் விதமாக தி.தி.தே. ஏற்பாடு செய்து உள்ளது.**



**திருமலையில் பக்தர்கள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இலவசமாகச் செல்வதற்கு தகுந்த வகையில் ஸ்ரீவாரி தர்ம ரதம் என்கிற பெயரில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றது. இதன் உதவியால் பக்தர்கள் திருமலையில் பெரும்பாலான இடங்களுக்கும் செல்லலாம். திருமலையில் மட்டும் அல்லாமல் திருப்பதியிலும் இரயில் நிலையத்தில் இருந்து பேருந்து நிலையம், அலிபிரி, ஸ்ரீவாரி மெட்டு மலைவழிப்பாதை வரை தி.தி.தே. இப்பேருந்தை இயக்கி வருகிறது. இதனால் இரயில் நிலையத்திலிருந்தும், பேருந்து நிலையத்திலிருந்தும் பக்தர்கள் மலை ஏறும் மார்க்கம் வரை இப்பேருந்தில் சென்று பின்னர் திருமலைக்குச் செல்லலாம்.**



மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா அருளிய

# ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம்

தெலுங்கு மூலம் : பேராசிரியர் கே சர்வோத்தம ராவ்,
தமிழாக்கம் : டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர்.

சென்ற இதழின் தொடர்ச்சி...

வைகுண்ட வாசனான ஸ்ரீமஹாவிஷ்ணு தீயோர்களை அழித்து நல்லோர்களைக் காப்பதற்கு பூலோகத்தில் பல அவதாரங்களை எடுத்தார். ஹரி, வராக அவதாரம் கொண்டு இரண்யாட்சகனைக் கொன்று அவனிட மிருந்து பூமியை விடுவித்தார். அத்தருணத்தில் படைப்புக் கடவுளான பிரம்மா தன் இரு கரங்களையும் கூப்பி வணங்கி,

“ஸ்வாமி! நீங்கள் இந்த வராக வடிவில் இந்த பூலோகத்தில் அர்ச்சாவதார மூர்த்தியாகி அருள்பாலித்தால், உலகம் அனைத்துக்கும் நலம் உண்டாகும் என்றார். பிரம்மாவின் வேண்டுகோளுக்கு இணங்க ஹரியும் அவ்வாறே இருக்கச் சம்மதித்தார். அப்படிப்பட்டவரான மஹாவிஷ்ணு தன்னுடைய நிவாசமான சூரிய மண்டலத்திலேயும், தேவர்களுக்கு நிவாசமான சொர்க்கத்திலேயும் வாசம் செய்து வருகிறார். அதே போல், வேங்கடாத்ரியிலும் சுதர்சன சக்கரதாரியாகவும் இருந்து வருகிறார் என சூத மஹரிஷி சொல்ல, நைமிசாரண்யத்தில் அமர்ந்து புண்ணிய கதைகளைக் கேட்டுக்கொண்டு இருக்கும் சௌனகாதி முனிவர்கள்,

“முனிவரே! ஒரு பிரதேசத்திற்கு ஒரு பெயர் இருப்பது என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதே. ஆனால், நீங்கள் சொல்லும்போது சேஷாத்ரி என்றும், கிரிடாத்ரி என்றும், வேங்கடாத்ரி என்றும் கூறினீர்கள். ஒரு மலைக்கு இத்தனை பெயர்களா? மிகவும் ஆச்சர்யமாக உள்ளதே. இவை மட்டுமே அல்லாமல் இன்னும் வேறு பெயர்கள் எத்தனை உள்ளதோ, அவைகளையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் மேலும் மேலும் எங்களுக்கு உண்டாகிறது. எனவே, அவைகளைப் பற்றியும் எங்களுக்கு எடுத்துச் சொல்வீர்களாக எனக் கேட்டுக் கொண்டனர். அதற்கு அவர் அப்படியே சொல்கிறேன் கேளுங்கள், வராக தேவன் பூதலத்தில் அர்ச்சாவதார மூர்த்தியாகத் தங்கியுள்ள இம்மலைக்கு சிந்தாமணி என்றும் பெயர். உலகத்தில் உள்ள பக்தர்களின் கோரிக்கைகள் அனைத்தும் தீர்த்து வைப்பதினால் இம்மலைக்கு சிந்தாமணி என்று பெயர்.

இம்மலைக்கு “ஞானாத்ரி” என்றும் பெயர் உள்ளது. மக்கள் என்றாலே ஞானம் உள்ளவர்கள் என்பது அல்லவா பொருள்! ஞானம் சிலரிடம் அளவோடு இருக்கும். மேலும், பலரிடம் ஞானத்தைப் பெற வேண்டும் என்ற தாகம் தொடர்ந்து இருந்து வரும். ஒருவருக்கு ஞானத்தைக் காட்டிலும் சிறந்தது வேறொன்றும் இல்லை. இந்த மலையை



# பௌர்ணமி திதியில் கருட சேவை

*“க்ரக்குன*
*நைதவநாடு கருடுனி*
*மீத எக்கெனு...”*

–அன்னமய்யா.



கருடாழ்வானின் பெருமைக்கெல்லாம் காரணம் அவர் ஸ்வாமியை சேவித்த பாங்கே ஆகும். எப்பொழுதும் ஸ்வாமியின் பாதமலரைப் போற்றித் துதித்து, இறைவனின் சிந்தனையைத் தவிர வேறு சிந்தனைகள் இல்லாதவர் கருடர். எப்பொழுதும் திருமாலின் கட்டளைகளை சிரமேற்கொண்டு பணி செய்வதற்கு தயாராய்க் காத்திருப்பவர். தன்னையே ஸ்வாமிக்கு அர்ப்பணித்துக் கொண்டவர் கருடாழ்வான். இத்தகைய கருடன் பிரம்மோத்ஸவத்தின்போது ஐந்தாம் நாள் உத்ஸவத்தில் பெருமாளுக்கு சேவை சாதிப்பது மட்டுமல்லாது மாதத்தில் ஒவ்வொரு பௌர்ணமி திதி அன்றும் வெண்ணிலா ஒளியில் திருமலையப்ப ஸ்வாமியைச் சுமந்து திருவீதி உலா வருவதைக் காண்பதற்கு கண் கோடி வேண்டும்.

நினைப்பவர்களுக்கும், இம்மலைமேல் நிவசிப்ப வர்க்கும் பரிபூர்ண ஞானம் உண்டாகும். அத னால் இம்மலை “ஞானாத்ரி” என்றும் அழைக்கப் படுகின்றது.

இத்திருமலைக்கு “தீர்த்தாசலம்” என்றும் பெயர் உண்டு. இம்மலையில் உள்ள புண்ணிய தீர்த்தங்களில் யாரொருவர் நீராடுகிறார்களோ அல்லது இப்புண்ணிய தீர்த்தத்தைப் பருகுகிறார் களோ அவர்கள் கோரிக்கைகள் நினைத்த மாத்திரத்திலேயே நடந்தேறும். இந்த மலை மீது ஒரு தீர்த்தம் அல்ல பல தீர்த்தங்கள் உள்ளன. அதனால் இம்மலைக்கு தீர்த்தாசலம் என்று பெயர் உண்டாயிற்று!

மேலும், இக்கிரிக்கு “புக்ஷ்கர சைலம்” என்றும் பெயர். எவ்விதமான விருப்பு வெறுப்பு அற்றவர்களான தவசீலர்கள் மகிழ்ச்சியாகவும் குறைபாடு ஒன்றுமில்லாது நீராடித் திளைப்பதற் கும், தாகம் தீர்ந்து மகிழ்வதற்கும், பூஜை முதலானவற்றை செவ்வனே செய்து கொள்வ தற்கும் வசதியான புஷ்கரணிகள் இம்மலையில் பல உள்ளன. எனவே, இம்மலை “புஷ்கர சைலம்” எனவும் பெயர் பெற்று விளங்குகிறது.

மேலும், இந்தப் பர்வதத்திற்கு “வ்ருஷபாத்ரி” என்றும் பெயர். வ்ருஷபன் என்ற அசுரன் இறைவனை நினைத்து தவம் செய்த இடம் என்பதினால் “வ்ருஷபாத்ரி” என அழைக்கப்படுகிறது.

இம்மலைக்குப் “பொன் மலை” என்றும் பெயர். தேவாதி தேவர்கள் எல்லாம் பார்த்துப் பூரித்துப் போகும் அளவுக்குத் தங்கக் கலசங்களால் அமைந்த மாளிகைகள் உள்ள காரணத்தினால் “பொன் மலை” என்றும் வழங்கப் படுகிறது.

இந்த பூமிக்கு “நாராயணாத்ரி” என்றும் கூட பெயர். முன்பு ஒரு காலத்தில் “நாராயணா” என்னும் பெயருடைய அந்தணன் ஒருவன் தான் தவம் செய்வதற்குத் தகுந்த இடம் இதுவே என்று தேர்ந்தெடுத்து தவமியற்றிய காரணத்தினால் “நாராயணாத்ரி” என்று வழக்கத்தில் வந்தது.

மேலும், நீங்கள் கேட்டீர்கள் அல்லவா? ஸ்ரீவேங்கடாத்ரி என்று பெயர் வந்ததற்கான காரணம் சொல்கிறேன். வைகுண்டத்திலிருந்து கிரிடாத்ரியை கருடாழ்வான் மூலமாக பூலோகத்திற்கு கொண்டு வந்து இங்கு வைக்கப்பட்ட காரணத்தினால் “ஸ்ரீவேங்கடாத்ரி” என்னும் பெயர் உண்டானது.

*தொடர்ந்து தரிசிப்போம்...*



திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# கண்கொள்ளாக் காட்சியாக திருவேங்கடவனின் இரட்டை பிரம்மோத்ஸவம்

வருடந்தோறும் ஏழுமலைவாசனுக்கு பல உற்சவங்கள் நடந்தேறினாலும் வருடத்திற்கு ஒரு முறை வரும் திருவேங்கடமுடையானின் அவதார தினமான புரட்டாசி திருவோண திருநட்சத்திரத்தை முன்னிட்டு நடைபெறும் பிரம்மோத்ஸவம் மிகவும் சிறப்பு வாய்ந்தது.

வேங்காடத்ரியில் கொலுவீற்றிருக்கும் திருவேங்கடமுடையான் பிரம்ம தேவனை அழைத்து உலக நன்மைக்காக தனக்கு உற்சவங்கள் நடத்தும்படி உத்தரவிட்டார். ஸ்வாமியின் உத்தரவின்படி பிரம்ம தேவன் பரபிரம்மத்திற்கு இந்த உற்சவத்தை மிகச் சிறப்பாக நடத்தியதால் இது பிரம்மோத்ஸவமாக அழைக்கப்படுகிறது.

சாந்திரமானபடி (தெலுங்கு பஞ்சாங்கம்) மூன்றாண்டிற்கு ஒரு முறை அதிக மாதம் வரும். அதனை முன்னிட்டு நவராத்திரி திருவோணத்தில் ஒரு பிரம்மோத்ஸவமும், அதற்கு முன்னர் வரும் புரட்டாசி திருவோணத்தில் ஒரு பிரம்மோத்ஸவமும் என இரட்டை பிரம்மோத்ஸம் நடைபெறும்.

இந்த இரட்டை பிரம்மோத்ஸவத்தில் அனைத்து வாகனங்களும் ஏறக்குறைய ஒரே மாதிரியாக இருந்தாலும், நவராத்திரி பிரம்மோத்ஸவத்தில் துவஜாரோஹணம், துவஜாவரோஹணம், மரத்திருத்தேர் நடைபெறாது. மரத்திருத்தேருக்கு பதிலாக தங்கத்திருத்தேர் நடைபெறும்.

## திருமலையப்ப ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

| வருடாந்திர பிரம்மோத்ஸவம் | நவராத்திரி பிரம்மோத்ஸவம் |
|---|---|
| 2023 செப்டம்பர் 18 முதல் 26 வரை | 2023 அக்டோபர் 15 முதல் 23 வரை |

**திருமலையப்ப ஸ்வாமி**
**வருடாந்திர பிரம்மோத்ஸவம்**
**2023 செப்டம்பர் 18 முதல் 26 வரை**





18-09-2023,
திங்கட்கிழமை
பகல் : துவஜாரோஹணம்



18-09-2023,
திங்கட்கிழமை
இரவு:
பெரிய சேஷ வாகனம்





19-09-2023, செவ்வாய்க்கிழமை
பகல் : சிறிய சேஷ வாகனம்
இரவு : ஹம்ஸ வாகனம்





20-09-2023, புதன் கிழமை
பகல் : சிம்ம வாகனம்
இரவு : முத்துப்பந்தல் வாகனம்



21-09-2023, வியாழக்கிழமை
பகல் : கல்பவிருக்ஷ வாகனம்



**திருமலையப்ப ஸ்வாமி**
**வருடாந்திர பிரம்மோத்ஸவம்**
**2023 செப்டம்பர் 18 முதல் 26 வரை**



21-09-2023,
வியாழக்கிழமை
இரவு:
சர்வபூபால வாகனம்



22-09-2023
வெள்ளிக்கிழமை
இரவு:
கருட வாகனம்





23-09-2023
சனிக்கிழமை
பகல் : ஹனுமத்வாகனம்
இரவு : யானை வாகனம்





24-09-2023
ஞாயிற்றுக்கிழமை
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்



17-07-2023 அன்று திருமலையில் ஆனிவர ஆஸ்தானத்தை முன்னிட்டு நடைபெற்ற திருமலையப்ப ஸ்வாமி "புஷ்ப பல்லக்கு சேவை"



09-08-2023 அன்று திருத்தனி அருள்மிகு சுப்பிரமணிய ஸ்வாமிக்கு தி.தி.தே. சார்பில் பட்டு வஸ்திரம் வழங்கிய தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு.ஏ.வி. தர்மா ரெட்டி ஐ.டி.இ.எஸ். அவர்கள்



09-08-2023 அன்று திருப்பதி கபிலதீர்த்தம் ஆலயத்தில் அருள்மிகு வள்ளி தேவசேனை உடனுறை சுப்பிரமணிய ஸ்வாமிக்கு நடைபெற்ற திருமஞ்சனம்



27-07-2023 அன்று திருமலையில் காவேரி ஓய்வுக் குடிலை திறந்து வைத்த அன்றைய தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவர், தி.தி.தே. செயலாட்சித் தலைவர்&நன்கொடை அளித்த ஐதராபாத்தை சேர்ந்த திரு.பாஷ்கரராவ் அவர்கள்




27-07-2023 அன்று திருமலையில் பக்தர்கள் கூட்டம் அதிகரிக்கும் நேரத்தில் பக்தர்கள் தங்குவதற்காக நிறுவப்பட்ட "மொபைல் கண்டைனர்" திறந்து வைத்த அன்றைய தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர், தி.தி.தே. இ.ஓ.



01-08-2023 அன்று தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுவின் பதவி அடிப்படையில் உறுப்பினராக பதவியேற்ற ஆ.மா. இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு தலைமைச்செயலாளர் திரு.கரிகால வளவன் ஐ.ஏ.எஸ். அவர்களுக்கு ஸ்வாமி பிரசாதங்களை வழங்கிய தி.தி.தே. செயலாட்சித்தலைவர் அவர்கள்



15-07-2023 அன்று திருப்பதி எஸ்.வி. கோசம்ரக்ஷண சாலையில் இன்-விட்ரோ கருபரிமாற்ற தொழில் நுட்ப உதவியால் பிறந்த கன்றுகளை பார்வையிடும் ஆ.மா. தலைமைச் செயலாளர் டாக்டர் கே.எஸ். ஜவஹர் ரெட்டி ஐ.ஏ.எஸ். & தி.தி.தே. ஜெ.இ.ஓ. (எச்.&இ) திருமதி சதா பார்கவி ஐ.ஏ.எஸ். அவர்கள்.



# திருவராகனும் திருவேங்கடத்தானும்

–திரு.எஸ். சுதர்சனம், நங்கைநல்லூர்,
9962788065.

முன்னொரு காலத்தில் பூமி காணாமல் போனது. அரக்கன் இரண்யாக்ஷன் பூமியை, பிரளய ஜலத்தில் மூழ்கடித்தான். பூமியைக் கண்டுபிடித்து, வேதங்களை மீட்டு, நம்மையெல்லாம் ரக்ஷிக்கவே வராக அவதாரம். பூமியை நிலைநாட்டியவன் – காப்பாற்றியவன் வராக மூர்த்தி. வராக ரூபமெடுத்த ஸ்ரீமந்நாராயணனே, இந்திரன் கல்மழை பொழிந்த போது, கோவர்த்தன மலையைக் குடையாகக் கவித்து, ஆயர்பாடி மக்களையும், பசும் பால் தரும் பசுக்களையும் ஸ்ரீகிருஷ்ணனாக அவதரித்துக் காப்பாற்றினான். வஞ்சகன், தீய மனத்தன் கம்சனை அழித்ததும் ஸ்ரீகிருஷ்ணனே. எவ்வளவோ அவதாரங்கள் எடுத்துத் தர்மத்தைக் காப்பாற்றிய எம்பெருமான் தான் தற்போது திருவேங்கடவனாகத் திருவேங்கடத்தில் அர்ச்சா அவதார மூர்த்தியாக கொலுவீற்றிருக்கிறான் என்கிறார் பொய்கை ஆழ்வார். ஆதி வராக புண்ய திருத்தலத்தில் வந்து நித்ய வாஸம் செய்யும் ஏழுமலையானின் அவதார ரகசியங்களையும், திருவிளையாடல்களையும், திருக்கல்யாண குணங்களையும் எல்லாக் காலத்திலும் எல்லோரும் கண்டுகளிக்க, நம்மையும் அழைக்கின்றார் (முதல் திருவந்தாதி. 39).

*"இடந்தது பூமி எடுத்தது குன்றம்*
*கடந்தது கஞ்சனை முன் அஞ்ச - கிடந்ததுவும்*
*நீரோத மா கடலே நின்றதுவும் வேங்கடமே*
*பேரோத வண்ணர் பெரிது"*

பிரம்மோத்ஸவம் நடக்கும் இச்சமயம் வேதம் வல்லார்களைக் கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணிந்து ஆழ்வார்கள் அருளிச் செய்த நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் சேவித்து, தூப தீபங்களையும், புனிதத் தீர்த்தங்களையும், தூய மலர்களையும் கொண்டு தோத்திரம் செய்யும் பெரியோர்கள் பல திசைகளிலிருந்தும் ஆதி வராக திருத்தலமாம் திருமலையில் கூடித் திருமலை வாசனான, ஏழுமலையானை, கோவிந்தனை, ஸ்ரீநிவாசனை வணங்கும் இடமே திருமகள் கேள்வன் திருவேங்கடவன் வாழும் திருவேங்கடம்.

*"நீ அன்று உலகளந்தாய் நீண்ட*
*திருமாலே !*
*நீ அன்று உலகு இடந்தாய்*
*என்பரால்"*

என்று பாடுகிறார் பூதத்தாழ்வார் (இரண்டாம் திருவந்தாதி 30). வாமனனை முதல் வரியில் புகழ்ந்தார். ஊழி வெள்ளத்தில் உலகம் மூழ்கின. *"பாசி தூர்த்துக் கிடந்த அப்பார்மகளை"* பூமியை நிலை நாட்டிய வராகனைப் புகழ்கிறார். *"வேங்கடமே நாம் விரும்பும் வெற்பு"* (இரண்டாம் திருவந்தாதி 53). இயற்கை வளம் நிறைந்த, அருவிகள் நிறைந்த மலை



# தங்கத்திருக்குடை



திருவேங்கடவனுக்கு எட்டாம் நாள் நடைபெறும் திருத்தேர் விழாவிற்கு முந்தைய நாள் அதாவது ஏழாம் நாளன்று தேர் மீது அலங்கரிக்கும் தங்கத் திருக்குடைக்கு மஞ்சள், குங்குமம், மலர் போன்றவற்றால் பூஜைகள் நடத்துவர். அந்த தங்கத்திருக்குடையை ஆலயத்தின் நான்கு மாடவீதிகளில் திருவீதி உலாவாக மேளதாள மங்கள வாத்தியங்களுடன் கொண்டு வந்து திருத்தேரின் மீது சிகரம் வைத்தாற்போல் வைத்து அலங்கரிப்பர். மறுநாள் திருமலையப்ப ஸ்வாமி தனது உபயநாச்சிமார்களுடன் அந்தத் திருத்தேரில் பவனி வந்து பக்தர்களுக்கு இன்னருள் புரிவார்.

திருவேங்கடமே நாம் ஆசைப்படும் திருமலை என்கிறார். *"திருவேங்கடம் அடை நெஞ்சமே"* என்று உபதேசம் செய்யும் திருமங்கை ஆழ்வாரும் *"இடவெந்தை மேவிய எம்பிரான்"* (பெரிய திருமொழி 1.8.4) என்ற நித்ய கல்யாணப் பெருமாளான லக்ஷ்மீ வராகனை நினைக்கிறார். வராகனையும் திருவேங்கடவனையும் ஒன்றாகவே நினைப்பது மங்களங்களை அளிக்கும் என்பது உறுதி ஆகிறது.

*"சிலம்பு முதல் கலன் அணிந்தோர் செங்கண் குன்றம்*
*திகழ்ந்த தெனத் திருவுருவம் பன்றியாகி*
*இலங்கு புவி மடந்தை தனை இடந்து புல்கி*
*எயிற்றிடை வைத்தருளிய எம் ஈசன் காண்மின்"*

பூமி தேவியின் நாயகனாகிய வராகப் பெருமான் தனக்கேயான திருமலையில் சிறிது நிலத்தை திருவேங்கடவனுக்கு அளந்து கொடுத்தான். அது மட்டுமா? தன்னிடம் பணிவிடை செய்து வந்த வகுளமாதா என்னும் தெய்வ நங்கையை திருவேங்கடவனுக்குப் பணி புரிய அனுப்பி வைத்தார். வகுள மாதா வேறு எவரும் இல்லை. எம்பெருமாட்டி யசோதையே! திருவேங்கடவனின் திருமணத்தைக் கண்டு களிக்க கலியுகத்தில் அவதரித்தவள். "தொல்லை இன்பத்தின் இறுதி கண்ட" யசோதை, கண்ணனின் திருமணத்தைக் கண்டுகளிக்காத யசோதை, பத்மாவதி தாயாருக்கும் திருமலையானுக்கும் நடக்கும் திருக்கல்யாணத்தைக் கண்டு மகிழவே வகுள மாதாவாக வந்து சேர்கிறாள்.

*"வெற்பு என்று வேங்கடம் பாடினேன் வீடு ஆக்கி*
*நிற்கின்றேன், நின்று நினைக்கின்றேன்"*

என்று பாடுகிறார் திருமழிசையாழ்வார் (நான்முகன் திருவந்தாதி 40). பரமபதம் பெற வழி வகுக்கும் திவ்ய தேசம் திருவேங்கடம் என்கிறார். *"திண்ணம் இது வீடு எண்ணத் திகழும் வெற்பு"* என்று திருமலையின் புகழ் பாடுகிறார் ஸ்வாமி தேசிகன்.

*"பரன் சென்று சேர் திருவேங்கட மாமலை ஒன்றுமே தொழ நம்வினை ஓயுமே"* (திருவாய் மொழி 3.3.8) என்று திருமலையின் பெருமை பாடுகிறார் நம்மாழ்வார்.

*"சென்று வணங்குமினோ..."* என்று உபதேசம் செய்கிறார் திருமழிசையாழ்வார் (நான்முகன் திருவந்தாதி 42). நான்முகனும் பரம சிவனும் தாமரை மலர்களை ஏழுமலையான் திருவடியிலிட்டு வணங்குகின்றார்கள் என்கிறார். திருவேங்கடவன்



முழு முதற்கடவுள், பரம்பொருள் என்னும் உண்மையை உணர்த்தும் அழகே அழகு.

*''ஆயிரம் கட்டி வராஹன்''* என்றுதான் பெரியோர்கள் ஆசிர்வாதம் செய்கின்றனர். இப் பகுதியை ஆண்ட மன்னர்கள் தங்கள் நாணயத்தில் வராக மூர்த்தியைப் பொறித்து வைத்தனரோ என்று கூட நினைக்கத் தோன்றுகிறது. கல்வெட்டுகள் ஆராயத்தகுந்தன. ஆதிசேஷனாக பகவானுக்குப் பல கைங்கர்யம் செய்த நித்ய சூரியே இராமானுஜராக அவதாரம் செய்ததாகவும், இராமானுஜர் திருமலையில் பல கைங்கர்யங்களைச் செய்ததாகவும் வரலாறு கூறுகிறது. வைணவம் தழைத்தோங்கக் காரணமாக வாழ்ந்தவர் இராமானுஜர், அகஸ்தியர், வாயுபகவான், கபிலர், சுக மாமுனி என்று பல முனிவர்கள் தவமியற்றிய மலை திருமலை. திருமலை ஒரு பக்தி திருத்தலம். முக்தி தரும் திருத்தலம். பல புண்ய தீர்த்தங்கள் கூடுமிடும்.

*''சென்னி ஓங்கு தண் திருவேங்கடம் உடையாய் உலகு*
*தன்னை வாழநின்ற நம்பீ! தாமோதரா! சதிரா!''*

என்று திருமலையையும் ஏழு மலையானையும் புகழ்ந்து பாடுகிறார் பெரியாழ்வார் (பெரியாழ்வார் திருமொழி 5.4.1). சிகரங்கள் நிறைந்த திருவேங்கட மலை உலகை வாழச் செய்யும், ரக்ஷிக்கும் நம்பத்தகுந்த நாயகன், தாமோதரன் வாழும் மலை. தாமோதரன் என்றாலே சுலபன், அணுகத் தகுந்தவன் என்றறியலாம். குலசேகராழ்வார் இம்மலையில் ஏதேனுமாகப் பிறந்து, பகவானுக்குக் கைங்கர்யம் செய்யும் பாக்கியம் வேண்டுமென்று பிரார்த்தனை செய்கிறார் (பெருமாள் திருமொழி 4.9).

*''செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே!*
*நெடியானே! வேங்கடவா! நின் கோயிலின் வாசல்*
*அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்*
*படியாய்க்கிடந்து உன் பவளவாய் காண்பேனே''*

பாபங்களைத் தீர்ப்பவனே! திருமலை வாசனே! அடியார்களும் தேவர்களும் பலரும் கூடி வந்து நிற்கிறார்கள். அவர்கள் திருவடி படும் "படியாய்" உன் கோயில் வாசலில் தோன்றினால் போதுமானது. அந்த படியிலிருந்து கொண்டே, கைங்கர்யமும் செய்து கொண்டே திருமலையானின் திருப்பவள வாய் அழகு கண்டு மகிழ்ந்திருக்கலாமே என்கிறார். "எம்பெருமான் பொன் மலை மேல் ஏதேனும் ஆவேனே" என்று பிரார்த்திக்கிறார். கைங்கர்யம் செய்யும் பாக்கியம் வேண்டும். ஏழுமலையானை வணங்கவும் வேண்டும் என்று குலசேகர ஆழ்வார் பிரார்த்திக்கிறார். நாமும் அவ்வகையே பிரார்த்திப்போம். திருவேங்கடவனுக்குக் கைங்கர்யம் செய்யவும் அவனை வணங்கி வாழும் நிலையையும் பிரார்த்தித்து உய்வோம் வாருங்கள்.

## ஸப்தகிரி வினாடி வினா போட்டி எண்.12 ஜுலை 2023 விடைகள்

1. ஆண்டாள்.
2. பெரிய திருமலை நம்பி.
3. பிள்ளைலோகாசாரியார்.
4. ஆடி மாதம், பூரம் நட்சத்திரம்.
5. ஆளவந்தார்.
6. நகம்.
7. நம்மாழ்வார்.
8. ஆடிப்பூஜை.
9. துரோணாசாரியார்.
10. ஸ்வாமி புஷ்கரணி.
11. ஆனி மாதம், ஸ்வாதி நட்சத்திரம்.
12. மரகதவல்லித்தாயார்.
13. வேதவியாசர்.
14. பதஞ்சலி முனிவர்.
15. ஸ்ரீகர விமானம்.



**போட்டி எண். 12**

**வினாடி வினா**

**சரியாக பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றி பெற்றவர்கள்**

1. செல்வன் லக்ஷ்மி நாராயணன், பழைய சீவரம், காஞ்சிபுரம்.
2. செல்வன் ஜே,ஹரிராஜா திசையான் விளை, நெல்லை.
3. செல்வி எஸ்.ஆர்.பவித்ரா, திண்டல், ஈரோடு.

# திருவேங்கடவனின் கிருஷ்ணாவதாரம்

– திரு. ஏ.கே. கோபி, கள்ளக்குறிச்சி, 94438 79892.



ஆழ்வார்கள் அதீத பக்தியாலே திருமலை வேங்கடவனை தரிசிக்கையில் தம்முடைய அவதாரங்களையும், அவதார காலங்களின் நிகழ்வுகளையும் ஆழ்வார்களுக்குக் காட்டியருளுகிறார். பெருவிடாய் தீர்ந்த ஆனந்த வெள்ளத்தில் மிதந்த ஆழ்வார்கள் பரவசத்துடனே அவ்வனுபவங்களை பாசுரங்களாய் வெளியிட்டருளினர். கிருஷ்ண அவதாரத்தின் பல லீலைகளை திருவேங்கடவன் திவ்ய மங்களத் திருமேனியில் ஆழ்வார்கள் கண்டருளியதை அனுபவிப்போம்.



### அம்புலி கடிதோடிவா

*“சுற்றும் ஒளிவட்டம் சூழ்ந்து பரந்தெங்கும்...”* என்னும் பாசுரத்தின் வாயிலாக, ஏ சந்திரனே! உன்னைச் சுற்றிலும் ஒளிவட்டத்தினை ஏற்படுத்திக் கொண்டு நடுவே பூர்ண சந்திரனாய் ஒளிர்ந்தாலும் என் மகன் கண்ணனின் அழகிற்கு நீ ஒப்பாக மாட்டாய். பூலோகத்திலே திருவேங்கடவனாய் எழுந்தருளப்போகும் வித்தகனான என்னுடைய கண்ணன் உன்னை கை காட்டி அழைக்கின்றான். அவன் கை வலியினை உணர்வதற்கு முன்னமே உன் தேவையற்ற கர்வத்தினை ஒழித்து அவனருகே ஓடி வந்துவிடு என பெரியாழ்வார் யசோதை நிலையில் திருவேங்கடவனை அனுபவிக்கிறார்.

### பேய்முலை சுவைத்தல்

*“பள்ளியாவது பாற்கடல் அரங்கம் இரங்கவன் பேய்முலை...”* என்னும் பாசுரத்தின் வாயிலாக பூதகி என்னும் அரக்கி அழகிய பெண்ணுருவம் எடுத்து நந்தகோபர் மாளிகைக்கு வருகை புரிந்தாள். பலவிதமான மாயப் பேச்சுகளால் யசோதையை மயக்கி, குழந்தை கண்ணனை மடியில் கிடத்திக் கொஞ்சினாள். இதனை அறிந்த குழந்தை கண்ணன் வேண்டுமென்றே அழத் தொடங்கினார். பூதகி தம்முடைய விஷப்பால் ஊரிய முலையின் காம்பினை கிருஷ்ணனின் திருவாயில் திணித்தாள். கிருஷ்ணன் விஷப்பால் முற்றிலும் உறிஞ்சி, பிறகு அவளின் உயிரினையும் சேர்த்து உறிஞ்சினார். இடி போன்ற பெரிய சத்தமிட்டு மலை போன்ற கோர வடிவத்துடன் கீழே சாய்ந்து பூதகி மாண்டு போனாள். கிருதயுகத்தில் வெண்மை நிறமும், துவாபர யுகத்தில் நீல நிறமும், கலியுகத்தில் கருமை நிறமும் கொண்டு விளங்குபவனான எம்பெருமான் திருமலையிலே தவமுனிவர்கள் நாள்தோறும் வணங்கும்படி சேவை சாதிக்கிறார்.



### உரலினிடை ஆப்புண்டு

*“வேங்கடத்து அரியைப் பரிகீறியை வெண்ணெயுண்டு உரலினிடை யாப்புண்ட தீங்கரும்பினை...”* என்னும் பாசுரத்தின் வாயிலாக கிருஷ்ணன்



சிறு பிள்ளையாய் விளையாடிக் கொண்டிருக்கும்போது யசோதை அடுப்படிக்குச் செல்ல, கிருஷ்ணன் உரலின் மீதேறி உறியில் தொங்கிய பானையில் வெண்ணெய் எடுத்து உண்ணும் போது பானை கீழே விழுந்து உடைந்து வெண்ணெயும் சிதறியது. யசோதை ஓடி வந்து ஒரு கயிற்றின் ஒரு முனையினை உரலோடு கட்டி மறு முனையை கண்ணன் இடுப்போடு கட்டும் போது கயிறு போதவில்லை. மற்றொரு கயிறுடன் முடிச்சு போட்டு மறுபடியும் கட்டும் போதும் கயிறு போதவில்லை. பல கயிறுகளை இணைத்தும் கண்ணனை கட்ட முடியாதது கண்டு ஆச்சரியம் அடைந்தாள். யசோதைக்கு மனமிரங்கி கயிற்றினோடு தம்மைப் பிணைத்துக் கொண்டு அருள் புரிந்த பகவான் கிருஷ்ணனே வேங்கடவனாக அடியார்களுக்குச் சேவை சாதிக்கிறார்.



**மருதம் சாய்த்தல்**

*“நின்ற மாமருதிற்று வீழ நடந்த நின்மலன் நேமியான்...”* என்னும் பாசுரத்தின் வாயிலாக யசோதையினால் உரலோடு பிணைக்கப்பட்ட கிருஷ்ணன் உரலினை இழுத்துக் கொண்டு தோட்டத்திற்குச் செல்கிறான். உயரமான இரு மருத மரங்களின் இடையே செல்லும்போது உரல் சிக்கிக் கொள்ள கண்ணன் வேகமாக இழுத்தவுடன் மரங்கள் இரண்டும் வேரோடு சாய்ந்தன. நாரதர் சாபத்தால் மரங்களான குபேரனின் புதல்வர்களான நளகூபனும் மணிக்கிரீவனும் சாபவிமோசனம் பெற்று கிருஷ்ணனை வணங்கி விடைபெற்றனர். துவாபர யுகத்தில் கோகுலத்து அடியார்களின் அனைத்து இடர்களையும் தீர்த்து வைத்த பகவானே கலியுகத்தில் திருவேங்கடவனானான்.

**பாதிரி பூச்சூட்ட வாராய்**



*“மச்சொடு மாளிகையேறி மாதர்கள் தம்மிடம் புக்கு...”* என்னும் பாசுரத்தின்



வாயிலாக ஆயர்குலப் பெண்கள் வாழ்கின்ற மாளிகைகளில் தினமும் நுழைந்து அவர்களின் மருக்கொழுந்தையும் பாதிரிப் பூவையும் சாற்றிக் கொண்டு அருள அதேபோன்று, திருவேங்கட மலையிலும் கோயில் கொண்டு அனைத்து வகை மலர்களையும் சூடிக் கொண்டு அருள வேண்டும் என மலையப்பனை யசோதையின் நிலையிலே அழைக்கிறார் பெரியாழ்வார்.

## குன்று எடுத்தல்

*''குன்றம் ஏந்திக் குளிர்மழை காத்தவன்...''* என்னும் பாசுரத்தின் வாயிலாக கோகுலத்தில் ஆண்டுதோறும் நடைபெறும் இந்திர விழாவினை ஸ்ரீமந்நாராயணன் விழாவாகக் கொண்டாட தம் விரலால் தாங்கிக் குடையாகப் பிடித்து கோகுலத்து மக்களையும் பசுக்களையும் காத்தார். இந்திரனும் கர்வம் ஒழிந்து மழையை நிறுத்தினான். குன்றம் எடுத்துக் காத்த அதே பகவான் திருமலையிலே நின்று சேவை சாதிக்கிறான். அவனை சரணாகதி அடைவதால் மட்டுமே ஜீவாத்மாவின் கர்மவினை முற்றும், அழிந்தொழியும் என்கிறார் பூதத்தாழ்வார்.

## புள்ளின் வாய் பிளத்தல்

*''பொங்கு புள்ளினை வாய்பிளந்த புராணர் தம்மிடம் பொங்குநீர்...''* என்னும் பாசுரத்தின் வாயிலாக பகாசுரன் என்னும் அரக்கன் பெரிய உருவமும், பயமுறுத்தும் கண்களுடனும் உள்ள கொக்கின் வடிவம் தாங்கி கண்ணனைக் கூறிய வாயலகினால் பற்றினான். வயிற்றிற்குள் கண்ணனை விழுங்கமுடியாமல் திணறினான். கண்ணன் தம்முடைய உடலில் கடுமையான வெப்பத்தினை தோற்றுவித்தார். அனல் தாங்கமுடியாமல் கண்ணனை பகாசுரன் சடக்கென கீழே விடுவித்தான். கண்ணன் கொக்கின் இரு வாயலகுகளையும் தம் கைகளால் பற்றிக் கிழித்து சம்ஹாரம் செய்தார். சுனையின் நீர் பொங்கி வழிய மீன்கள் துள்ளிக் குதிக்கும்



## பிரம்மோத்ஸவத்தில் கண்கவரும் கலைநிகழ்ச்சிகள்

**திருமலையப்ப ஸ்வாமி பிரம்மோத்ஸவத்தில் ஸ்வாமி திருவீதி உலா வரும் பொழுது ஸ்வாமி முன்னர் பல்வேறு கலைக்குழுவினர் நடனமாடி, சங்கீர்த்தனைகள் பாடிக்கொண்டு, சிறப்பாக தம்மை இறை அலங்காரங்களில் அலங்கரித்து கொண்டு, பஜனைகள் செய்து கொண்டும் வருவர்.**

**இதற்காக பல மாநிலங்களிலிருந்தும் கலைஞர்கள் பயிற்சிகள் மேற்கொண்டு தி.தி. தேவஸ்தானத்தினரிடம் முன்னதாகவே அனுமதி பெற்றுக் கொண்டு பல்வேறு கலை நிகழ்ச்சிகளை நம் கண்களுக்கு விருந்தாக அளிப்பர்.**









திருவேங்கடமலையில் சேவை சாதிக்கும் கண்ணனான திருவேங்கடவனை சரணாகதி செய்வதற்கு தம் நெஞ்சிற்கு அறிவுறுத்துகிறார் ஆழ்வார்.

### குருந்தம் ஒசித்தல்

*''பாற்கடலும் வேங்கடமும் பாம்பும் பனிவிசும்பும்...''* என்னும் பாசுரத்தின் வாயிலாக கண்ணனைக் கொல்வதற்கு ஏவப்பட்ட அசுரன் ஒருவன் குருந்த மர வடிவினை எடுத்துக் கொண்டு கண்ணன் மரம் ஏறுகையில் கொன்று விடலாம் எனக் காத்திருந்தான். இதனை அறிந்த கண்ணன் அந்தக் குருந்த மரத்தினை முறித்து அசுரனையும் அழித்தார். பாற்கடலிலும் ஸ்ரீவைகுந்தத்திலும் பாம்பணையில் பள்ளி கொள்ளும் எம்பிரான் சாஸ்திரங்களை நன்குணர்ந்த ஞானிகளின் நெஞ்சினிலும் குடியேறுகிறான். அத்தகைய எம்பிரானே பூலோகத்தில் ஏழுமலையிலே திருவேங்கடவனாய் குடிகொண்டு குருந்த மரத்தினை முறித்ததுபோல் அடியார்களின் துன்பங்களை முறித்தருள்கிறான்.

### குடக்கூத்து

*''மன்றமரக் கூத்தாடி மகிழ்ந்தாய் என்றும்...''* என்னும் பாசுரத்தின் வாயிலாக கோகுலத்தில் செல்வம் மிகுந்ததால் நாற்சந்தியில் அனைவரும் கூடி கூத்துக்கள் நடத்தி ஆடி மகிழ்வர். கண்ணபிரான் தாமே அக்குடக்கூத்து நடனமாடி தாமும் மகிழ்ந்து ஆயர்பாடியினரையும் மகிழ்வித்தான். இத்தகைய செல்வச் செழிப்பான கண்ணபிரானே மறுபடியும் செல்வச்செழிப்புடன் திருவேங்கடத்திலே எழுந்தருளி தாமும் மகிழ்ந்து தம் அடியார்களையும் மகிழ்விக்கிறான்.

### காளை அடக்குதல்

*''மானேய் மடநோக்கி திறத்து எதிர்வந்த...''* என்னும் பாசுரத்தின் வாயிலாக அழகிய மானின் கண்களைப் பெற்றவளான நப்பின்னைப் பிராட்டியினை மணம் முடிக்கும் பொருட்டு அவள் தந்தையின் கட்டளைப்படி தம்மை எதிர்த்து பாய்ந்து வந்த ஏழு எருதுகளை அடக்கி, தம்முடைய பராக்கிரமத்தினை காட்டி, நப்பின்னையினை மணம்புரிந்து அவளின் மனத்தில் குடியேறிய கண்ணபிரானே! திருமலையிலும் குடி கொண்டு, தம்முடைய மனத்திலும் குடிகொண்டு, அரசனாய் வீற்றிருக்கிறான் என்கிறார் திருமங்கையாழ்வார்.

### கம்சன் வதம்

*''இடந்தது பூமி எடுத்தது குன்றம்...''* என்னும் பாசுரத்தின் வாயிலாக கண்ணபிரான் மஞ்சத்தின் மீதிருந்த கம்சனின் மார்புமேல் குதித்து, அவனின் கிரீடம் கீழே விழ உடைவாள் தூரத்திலே விழுமாறு மஞ்சத்திலிருந்து கீழே தள்ளி, கம்சனின் மேல் இடி போன்று குதிக்க கம்சன் மாண்டுபோனான்.

வராக அவதாரத்திலே சமுத்திரத்திலிருந்து பூமியை எடுத்துக் கொம்பிலே தாங்கியும், கிருஷ்ண அவதாரத்திலே கோவர்த்தன மலையினை விரலால் குடைபிடித்தும் லீலைகள் புரிந்த கடலின் நிறத்தினை உடையவனான எம்பெருமான் திருமலையிலே நின்ற கோலத்தில் சேவை சாதிப்பதைக் கொண்டாடி மகிழ்கிறார் பொய்கையாழ்வார்.

### ஐவர்க்கு அரசளித்தல்

*''வாம்பரி யுக மன்னர்தம் உயிர்செக ஐவர்கட்கு அரசளித்த...''* என்னும் பாசுரத்தின் வாயிலாக மகாபாரதப் பெரும்போரில் அர்ஜுனனுக்குத் தேரோட்டியாய் உதவி செய்தருளினார் கண்ணபிரான். துரியோதனனுக்கு சாதகமாய் குதிரைகளின்மேல் ஆரோகணித்துப் பாய்ந்து வந்த எதிரி மன்னர்களின் உயிர் போகும்படியான போர்க்கள உதவிகள் பல புரிந்து பஞ்ச பாண்டவர்களுக்கு மீண்டும் ராஜ்ஜியத்தினை மீட்டுத் தந்த கண்ணபிரான் மூங்கில் மரங்கள் நிறைந்த திருவேங்கட மலையில் சேவை சாதிக்கிறான்.

திருமலையப்ப ஸ்வாமியான எம்பெருமானே பஞ்ச பாண்டவர்களைப் போன்று தேவரீர் மீதான பரமபக்தியினை தமக்கு அருள வேண்டுமென ஆழ்வார் பிரார்த்திக்கிறார்.

### ஆலிலைபள்ளிகொள் மாயன்

*''நீரார் கடலும் நிலனும் முழுதுண்டு...''* பிரளய காலத்தில் நீர் நிறைந்த கடல்கள் பூமி, ஆகாயம் உள்ளிட்ட அண்டசராசரம் முற்றும் தம்முடைய திருவாயாலே முழுதும் உண்டு தம் திருவயிற்றிலே அடக்கிக்காத்து அழகிய ஆலமரத்தின் இளம் தளிரில் திருக்கண் வளர்ந்தருளும் எம்பெருமானே திருவேங்கடமலையில் அடியார்களுக்கு ஆராவமுதமாய் அந்தமில் பேரின்பம் அருளும் விதமாய் திருக்காட்சி தந்தருளிக் கொண்டிருக்கிறார்.



# கோவிந்தனுக்கு கோ சேவை

**திரு.அத்திரங்கராஜன்,**
**திருப்பதி, 9849099246.**



“கோ சம்ரக்ஷணை” என்கிற பசுக்களின் பாதுகாப்பு என்பது தி. தி. தேவஸ்தானத்தாரின் முதன்மை கடமையாகும்.

ஸ்ரீகிருஷ்ணர் கோகுலத்தில் பசுக்களைப் பாதுகாக்கும் பணியே தனது முதன்மையான பணியாகக் கொண்டிருந்தார். அவரை நினைவு கூறும் விதத்தில் திருவேங்கடவனை பக்தர்களும் “கோவிந்தா, கோவிந்தா” என்று அன்புடன் அழைப்பதை நாம் எல்லோரும் அறிந்த ஒன்று. அனைத்து யுகங்களிலும் கோமாதாவிற்கு முதன்மையான இடம் கொடுக்கப்பட்டுள்ளது.

கோயில்களுக்கு பசுக்களை தானமாக வழங்குவது தொன்றுதொட்டு வரும் ஒரு சம்பிரதாயம். கோயில்களில் “கோ பூஜை” செய்ய மட்டும் அல்லாமல், பால் பொருட்கள் கொண்டு நைவேத்தியம், பிரசாதங்கள் தயாரிப்பதற்கும் இந்த கோதானம் உதவும். திருமலைக்கு வரும் பக்தர்களிலும் பல நூற்றாண்டுகளாக இது போன்ற ஒரு நம்பிக்கை உண்டு. திருமலைக் கோயிலுக்கு பசுக்களை தானம் வழங்கும் பழக்கம் 2ஆம் குலோத்துங்கச் சோழன் காலத்தில், அதாவது 1032 ஆம் ஆண்டிலிருந்து உள்ளதாக கோயில் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீவேங்கடேஸ்வர கோ சம்ரக்ஷண சாலை திருப்பதி தேவஸ்தானத்தின் ஒரு முக்கிய அங்கமாகத் திகழ்கிறது. இந்தக் கோசாலை முதன் முதலில் திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ பெருமாள் கோயில் அருகே நிறுவப்பட்டது. பிறகு மலையடிவாரமான அலிபிரி அருகே மாற்றப்பட்டது. அதன் பிறகு இப்பொழுது உள்ள மஹதி கலை அரங்கம் அருகே மாற்றப்பட்டு, பின்பு தும்மலகுண்டா சாலையில் இப்பொழுதுள்ள இடத்தில் வந்து சேர்ந்தது. இந்த இடத்தில் இடப் பற்றாக் குறையால் பலமனேர், பாக்கராப் பேட்டை போன்ற பல இடங்களில் இதன் கிளைகள் அமைக்கப்பட்டு நூற்றுக்கணக்கான பசுக்களைப் பாதுகாத்து வருகின்றது. அதேபோல திருச்சானூர் பத்மாவதி தாயார் திருக்கோயிலில் தாயாருடன் சேர்ந்து திருமாட வீதிகளில் பவனி வருவதற்காகவும், திருமலையில் கோயில் நிகழ்வுகளில் பங்கு பெறுவதற்காகவும் மலைமேல் ஒரு கோசாலையும் உள்ளது. சமீபத்தில், மலை அடிவாரத்தில் கோ பிரதக்ஷிணம் செய்வதற்காக ஒரு கோசாலை அமைக்கப்பட்டது. வேண்டுதலை நிறைவேற்ற திருமலைக்கு வரும் பக்தர்கள்

முதலில் இந்தக் கோயிலில் ஏழு பசுக்களை பிரதக்ஷிணம் செய்து பிறகு மலையேறும்படி ஏற்பாடு செய்து இருக்கின்றனர். நாட்டு இனப் பசுக்களை பேணி பாதுகாக்கும் ஒரு மிகப் பெரிய பொறுப்பை தி.தி.தே. கையில் எடுத்துக் கொண்டிருக்கிறது. அழிந்து வரும் சில நாட்டு இனப் பசுவகைகள் இங்கு மிகவும் அக்கறையுடன் பராமரிக்கப்படுகின்றன. தானம் கொடுக்கப்படும் பசுக்களை வாங்கிப் பாதுகாப்பது மட்டுமல்லாமல் அவற்றை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கி விளை நிலங்களை வளமாக்கவும் செய்கிறது இந்த கோசாலை.



கோ தானம் செய்ய விரும்பும் பக்தர்கள் முதலில் அருகில் உள்ள கால் நடை மருத்துவரிடம் பசுவைக் காட்டி, அதன் ஆரோக்கியத்தை குறிக்கும் வகையில் ஒரு சான்றிதழ் வாங்கிக்கொள்ள வேண்டும். பிறகு தேவஸ்தானத்தின் இலவச தகவல் மையத்தை 0877–2277777 என்ற எண்ணில் அழைத்து கோசாலையினரை தொடர்பு கொண்டு பிறகு திருப்பதிக்குக் கொண்டு வர வேண்டும். கலப்பு வகை கால்நடைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

இன்னொரு பக்கம் நாட்டு பசு மற்றும் காளை வகைகளை விவசாயிகளுக்கு வழங்கும் திட்டமும் நிறைவேற்றி வருகிறது. உழவர்களுக்கு நாட்டு பசுக்கள், காளைகள் வழங்குவதன் மூலம் அவற்றின் கோமியம், சாணம் கொண்டு விவசாயம் செய்வதனால் மண்ணின் வளம் பெருகி இரசாயணமற்ற பயிர் சாகுபடி செய்து, மக்களின் உடல் நலம் காக்கப்படும். இந்த நல்லெண்ணத்துடன் தி.தி.தே. ஆந்திரப் பிரதேச அரசின் அங்கமான மார்க்பெட் மற்றும் அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட ஆர்.ஒய்.எஸ்.எஸ். எனும் “ரைத்து சாதிகார சமஸ்தா” என்ற அமைப்புடன் மும்முனை அங்கீகாரம் செய்து கொண்டது. பசுக்கள் அல்லது காளை மாடுகள் தேவைப்படும் உழவர்கள் ஆர்.ஒய்.எஸ்.எஸ். அதிகாரிகளுக்கு விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும். அவர்கள் இந்த விவசாயிகளை தொடர்பு கொண்டு, அவர்களின் தேவைக்கேற்ப கால்நடைகளை அனுப்பி வைப்பார்கள்.

இங்கு ஒரு கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால் தேவஸ்தானத்தினர் பால் வளம் வற்றிப்போன பசுக்களைத்தான் உழவர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் வழங்குகிறார்கள். அதாவது, பால் வற்றிப்போனாலும்

## கோயிலுக்கு ஒரு கோமாதா



தேவஸ்தானம் மேற்கொண்ட இன்னுமொரு தரமான நிகழ்ச்சி “குடிக்கோ கோமாதா” அதாவது “கோயிலுக்கு ஒரு கோமாதா”. ஒவ்வொரு கோயிலுக்கும் ஒரு பசுவும், அதன் கன்றும் அளிப்பதன் மூலம் அங்கு கோ பூஜை தொடங்கப்படும். காலையில் எழுந்தவுடன் ஒவ்வொருவரும் கோயிலுக்குச் சென்று பசுமாட்டை தொழும் கலாச்சாரம் மீண்டும் அமலுக்கு வரும். பசுவின் பாலும், தயிரும் கொண்டு பிரசாதம் செய்து அந்த சிறிய கோயில்களில் நைவேத்தியம் படைக்க உதவும். அதுமட்டும் அல்ல, அந்தக் கோமியமும், மாட்டுச் சாணமும் விரிவாகப் பயன்படுத்துவதன் மூலம் அந்தக் கிராமத்தையே இயற்கை வளமிக்க ஊராக மாற்ற முடியும். இப்பொழுது திருப்பதியில் உள்ள பல கோயில்களில் நித்திய கோ பூஜை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.







# ஸப்த கோ பிரதக்ஷிணை மந்திரம்







**திருப்பதியில் அலிபிரி பாதாள மண்டபம் அருகில் "ஸப்த கோ" பிரதக்ஷிணை மந்திரம் அமைந்துள்ளது. திருமலை திருப்பதி தேவஸ்தானம் பசுக்களுக்கு முக்கியத்துவம் அளிப்பது அனைவரும் அறிந்ததே. "கோயிலுக்கு ஓர் கோமாதா" திட்டம் அதற்கு ஓர் சான்றாகும்.**

**ஏழு மலைகளின் அடையாளமாக ஏழு பசுக்கள் அவற்றின் கன்றுகள், வேணு கோபால ஸ்வாமி விக்ரஹம், "கோ" பூஜை, "கோ" தரிசனம் குறிப்பாக ஶ்ரீவேங்கடேஸ்வரா ஸப்த கோ பிரதக்ஷிணை மந்திரத்தில் நிறுவப்பட்டுள்ளன.**

**இந்த கோ பிரதக்ஷிணை மந்திரத்தை தரிசித்தால் கிரஹ சாந்தி கிட்டும். பக்தர்கள் தாங்கள் தேர்ந்தெடுக்கும் பசுக்களின் எடைக்கேற்ப துலாபார சேவை மூலமாக பணம், உணவுப்பொருட்கள், மாட்டுத் தீவனங்கள் தானம் செய்ய வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஸப்த கோசாலையில் கோவிந்தனைத் தரிசித்து, கோபிரதக்ஷிணம் செய்த பின்னர் மலை ஏறத்தொடங்கலாம்.**

கால்நடைகள் மனித சமுதாயத்திற்கு எவ்வளவோ உதவியாக இருக்கும் என்பதனை உணர்த்தவே இந்தச் செயல். வெறும் பால் சுரக்கும் செய்கையை வைத்து கால்நடைகளின் தரத்தை எடைபோடாமல், கோமியம் மற்றும் மாட்டுச்சாணம் கொண்டு நில வளம் பெருக்குவதில்தான் அவற்றின் முழு ஆற்றல் இருப்பதை மக்களுக்கு உணர்த்தவே இந்த முடிவு. பால்வளம் வற்றினாலும் ஒரு பசுவினால் உழவன் குடும்பத்தை நிலைநிறுத்த முடியும். இந்த பூமியை பசுமையாக்கவும் முடியும் என்ற அறிய உண்மையை மனிதகுலத்திற்கு உணர்த்தும் இச்செயல் வெகுவாகப் பாராட்டப்படுகிறது. அதே போல், பாரம்பரிய முறையில் நிலத்தை உழ விரும்பும் விவசாயிகளுக்கு காளைகளும் வழங்கப்படுகின்றன.

நாட்டுப் பசுக்களையும், காளைகளையும் கொண்டு விவசாயம் செய்வதில் இன்னொரு உபயோகமும் இருக்கிறது. கோமாதாவை ஆதாரமாகக் கொண்டு செய்யும் விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையில் திருமலை திருப்பதி தேவஸ்தானம் இன்னொரு அடி முன் வைத்துள்ளது. திருமலை கோயில் பிரசாத விநியோகத்திற்கு தேவையான அரிசி, சர்க்கரை, வெல்லம், மஞ்சள், தானியம் மற்றும் பருப்பு வகைகளை வாங்குவதில் இந்த இயற்கை முறையில் விளைவித்த விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கிறது. இதற்கு இயற்கை முறையில் தயாரிப்பதாக உழவர்கள் சான்றிதழ் பெற்றுக் கொள்ள வேண்டும். தூய்மையான, இரசாயணமற்ற உணவுப்பொருட்கள் கொண்டு பிரசாதங்கள் செய்து ஸ்வாமிக்கு நைவேத்தியம் படைக்க இந்த முடிவு உதவும்.

நாட்டுப் பசுக்கள் வளமையின் சின்னமாகக் கருதப்படுகிறது. அவற்றைப் பராமரித்து பூஜிக்கும் இடம் பூலோகத்தில் சொர்க்கமாக மாறும். இந்தப் பசுக்களை உழவர்களுக்கும், கோயில்களுக்கும் வழங்குவதன் மூலம் ஒவ்வொரு கிராமத்தையும் சொர்க்கபூமியாக மாற்றுவதே தேவஸ்தானத்தின் லட்சியமாகும்.

# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 86

**இடமிருந்து வலம்**

1. திருமலையில் உண்டியல் எண்ணும் பணி.....(7)
4. வேங்கட மலையில் முதலில் வணக்கத்திற்குரிய ஸ்வாமி.....(8)

**வலமிருந்து இடம்**


2. இரவு (நடைசாற்றும்முன்) ஏழுமலையான் அளிக்கின்ற தனித்தத் தரிசனம்.....(6)
5. திருவேங்கடவனுக்குக் கொடியாகத் திகழ்பவர்......(6)
12. அரவனைத் துயில்வோன்.....(8)
13. தை 3ஆம் நாளன்று ஏழுமலையில் துஷ்ட மிருகங்களின் மீது அம்பு விடுகின்ற பாவனை விழா.....(10)

**மேலிருந்து கீழ்**

1. திருமலை திருப்பதியில் தயாராகும் பசுவின் மூல வஸ்துக்கள்....(12)
3. மாடவீதிகளில் மாலவன் வலம் வருகின்ற ஒளிர்கின்ற வாகன சேவை....(11)
4. திருமலையப்ப ஸ்வாமியின் மனையாட்டி....(9)
5. ஏழுமலையில் முடிகாணிக்கை செலுத்தும் இடம்....(7)
6. திருமலையப்ப ஸ்வாமிக்கு நடக்கின்ற மலர் வேள்வி.....(6)
7. வேங்கடநாதர் ....(6) வளர்ப்பு மகளை மணந்தார்.

**கீழிருந்து மேல்**

7. திருப்பதியிலிருந்து திருமலைக்குச் செல்லும் 4 வழிகளில் காட்டுப் பாதை....(6)
8. திருமலையில் பெரிய உண்டியலின் பெயர்......(5)
9. வேங்கடநாதனின் கருவறைப்படி ....(8) பெயர் கொண்டது.



தொகுப்பு :
திரு. டி. ஆர். மனோகர்,
தஞ்சாவூர், 99426 44807


புதிருக்கு விடை அறிய
43ம் பக்கம்
பார்க்கவும்...

10. திருமலையில் நடைபெறுகின்ற ஒரு நாள் பிரம்மோத்ஸவம்....(7)
11. திருவேங்கடநாதன் அதிகாலையில் அளிக்கின்ற முதல் தரிசனம்....(7)
12. திருமலையில் பக்தர்களின் பசிப்பிணி போக்க அளிக்கப்படுவது....(9)
13. வேங்கடமலையில் நடக்கின்ற இராமாநுஜரின் அவதார விழா....(11)

**திருமலை திருப்பதி தேவஸ்தானம்**

- திருமலையில் தண்ணீரை வீணாக்காதீர்கள். தேவையில்லாமல் குழாயைத் திருப்பி விட்டுச் செல்லாதீர்கள்.
- திருமலையில் மின்சாரத்தை வீணாக்காதீர்கள்.
- வெளியே செல்லும் போது மின்விசிறிகள், விளக்குகள், செல் போன் சார்ஜிங் ஆகியவற்றை நிறுத்தி விட்டுச் செல்லவும்.
- திருமலையில் அன்னப்பிரசாதத்தை வீணாக்காதீர். வேண்டிய அளவிற்கே வாங்கிக் கொள்ளவும்.





# ஏகாதசி

திரு.துளசி கிருஷ்ணா,
சென்னை.

## இந்திரா ஏகாதசி

ஐப்பசி மாதம், கிருஷ்ண பக்ஷத்தில் வரும் ஏகாதசியின் பெயர் இந்திரா ஏகாதசி என்பர். இதன் மகிமையைக் கூறுகிறேன் தர்ம நந்தனா கேள் என கிருஷ்ணர் ஆரம்பித்தார். இந்த ஏகாதசி பித்ருக்களை உயர்த்த வல்லது. முன்பு கிருதயுகத்தில் இந்திர சேனன் என்பவன் மாஹிஷ்மதி நகரத்தை அறவழி நின்று ஆண்டு வந்தான். அவன் நிறை புகழாளன். கோவிந்த நாமத்தை அநவரதம் உச்சரிப்பவன். பரம வைஷ்ணவன்.

ஒருநாள் நாரதர் அவனை அடைந்தார். இந்திர சேனனிடம் அரசனே! எல்லா உலகங்களையும் சுற்றிக் கொண்டு ஒரு சமயம் யமவரம் சென்றேன். அங்கே உன் தந்தையைக் கண்டேன். அவர் என்னைப் பார்த்து, "பிரபோ! நான் செய்த யாகம் முதலிய நல் வினைகள் அநுட்டானக் குறைவு களால் பூர்த்தியடையாமல் குற்றம் உள்ளவைகளாயின. அதனால் எனக்கு இந்த நரக வாசம். தேவரீர், மாஹிஷ்மதி நகருக்கு எழுந்தருளி என் மகனிடம் என் நிலைமையைக் கூறி இதிலிருந்து நான் கரையேறி நல்லுலகம் அடைய இந்திரா ஏகா தசி விரதம் இருக்குமாறு பணித்து அவனை அந்தப் பலனை எனக்கு அர்ப்பணிக்குமாறு கூற வேண்டும் என்று கூறினார். உன் தந்தை சொர்க்கமடைய இந்திரா ஏகாதசி விரதமிருப்பாயாக என்று நாரதர் கூறினார்.

விரத அநுட்டானத்திற்கு சில குறிப்புகளைக் கூறுகிறேன். தசமி அன்று காலை நன்னீராடி ஸ்நானம் செய்து, சிராத்தத்திற்குரிய பொருட்களைச் சேகரித்து, பித்ரு ப்ரீதிக்காக இரவு கண் விழித்து மறு நாள் ஏகாதசி காலையில் நன்னீ ராடி ஸ்நானம் செய்து, சிராத் தத்திற்குரிய பொருட்களைச் சேக ரித்து, பித்ரு ப்ரீதிக்காக இரவு கண் விழித்து மறுநாள் ஏகாதசி காலை யில் நன்னீராடி காலைக்கடன் களை முடித்து விட வேண்டும். "அத்ய ஸ்தித்வா நிராஹார: ஸர்வ போக விவர்ஜித! ஸ்வோ போக்ஷ்யே புண்டரீகாக்ஷ சரணம் மே பவாச்யுத:" என்று உச்சரித்து, உபாவச சங்கல்பம் செய்து கொண்டு மதியம் சாளக்ராம பூஜை செய்து இரவில் விழித் திருந்து மறுநாள் துவாதசி அன்று நீராடி பகவத் ஆராதனம் செய்து, பிராமண போஜனம் செய்தல் வேண்டும். உணவில் கோதுமை, எள், உளுந்து, கடலை இவற்றைத் தகுந்தபடி பக்குவம் செய்து உப சரிக்க வேண்டும். அவர் எழுந்த பிறகு பந்து மித்ரர்களுடன் பாரணை செய்ய வேண்டும் என்று கூறி மறைந்தார். அரசனும் அங் ஙனமே செய்து முடித்தான். ஏகா தசி பலனைத் தந்தைக்கு அர்ப்ப ணித்தான். தந்தை இந்திரசேனனும் நல்லுலகு அடைந்தனன்.

## பாபாவகுசா ஏகாதசி

ஐப்பசி மாதம் சுக்லபக்ஷ ஏகாதசி பாபாவகுசா எனப்படும். அதாவது பாபங்களுக்கு வஜ்ராயுதம் போன்றது என்று பொருள்படும். இந்த ஏகாதசியில் பத்ம நாப மூர்த்தியை பூஜிக்க வேண்டும். இது இம்மை, மறுமைப் பலன்களைத் தர வல்லது. இந்த

ஏகாதசியில் சார்ங்க பாணியைச் சரணம் அடைபவர் எமலோகத்தைக் காணார். பல்லூழி நரக வேதனையை அனுபவிக்க இருக்கும் பித்ருக்களைக் கூட இந்த விரதம் கரை சேர்க்கும். ஆயிரம் அஸ்வ மேத யாக பலனையும் தரவல்லது. 100 ராஜசூய யாக பலனையும் தரவல்லது. இந்த ஏகாதசியில் ஓர் அணுவுக்கு இணையாக மாட்டா.

இது உடல் நலம், அனுகூலமான மனைவி, புலமை நிறைந்த புதல்வன், தனம், நற்றோழன் இவர்களைக் கொடுக்கும். இந்த ஏகாதசியில் உபவாசம் இருப்பவன் மாத்ரு வர்க்கத் தில் 10 தலைமுறை பித்ருக்களை கரை ஏற்று கிறான். பித்ருவர்க்கத்தில் 10 தலைமுறை யினையும், மனைவி கோத்தி ரத்தில் 10 தலைமுறை பித்ருக்களையும் கரை சேர்க்கிறான். இந்த ஏகாதசியில் தங்கத் தால் செய்த எள், மேலும் பூமி, பசு, அன்னம், ஜலம், குடை, செருப்பு முதலிய வற்றை இயன்ற அளவு தானம் செய்யலாம். ஆகையால், இத்தகைய பெருமை வாய்ந்த ஏகாதசியை நீயும் அனுஷ்டிப்பாயாக என்று கண்ணன் கூறினான்.

*தொடரும்....*

## வைணவ குறுக்கெழுத்துப்புதிர் 86க்கான விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ப | ர | கா | ம | ணி | சே | வை | சே | த | ந் | கா | 2 ஏ |
| ஞ் | ழி | 3 சூ | 4 ஸ்ரீ | வ | ரா | க | மூ | ர் | த் | தி | ம் |
| ச | வ | ரி | ப | ர் | வா | ழ் | டா | ரு | 5 க | ம் | வ |
| க | ய | ய | த் | வா | 6 பு | மி | | வை | ல் | த | ஸ |
| வ் | ண் | ப் | மா | ழ் | ஷ் | த | வு | சே | யா | சா | ற் |
| ய | ர | பி | வ | ரா | ப | ப் | லு | த | ண | ர | உ |
| ப் | 7 ஆ | ர | தி | க | யா | ஸ | கொ | பா | க | பி | ர் |
| பொ | கா | பை | தா | சே | க | த | ரி | ர | ட் | ப் | ர |
| ரு | ச | வா | யா | ல | ம் | ர | 8 சி | ப் | டா | ன | கா |
| ட் | ரா | க | ர் | 9 கு | | 10 இ | | 11 சு | | ன் | ய |
| க | ஜ | ன | ன் | ன | ய | ச | த | ந் | ன | 12 அ | ஷ் |
| ள் | ன் | ம் | வ | ஸ | ற் | உ | டை | ட் | வே | ரி | 13 பா |





**திருமலையப்ப ஸ்வாமி பிரம்மோத்ஸவத்தில் ஐந்தாம் நாள் காலையில் மோகினி அவதாரத்தில் திருமாட வீதிகளில் வலம் வருவார். "சர்வத்திற்கும் தலைவனாய், சகல உயிரையும் காத்தருளும் ஜகன்னாதனாக தேவர்களுக்கு அமுதீன்ற மோகினியாய் உலா வந்து – தேவாதி தேவர்களையும் ஆட்கொண்ட மலையப்பனே! என்று புகழும் விதத்தில் மோகினி வடிவெடுத்து திருமலையப்ப ஸ்வாமி ஸ்ரீகிருஷ்ணருடன் திருவீதி உலா வருவார்.**

**திருமலையில் பிரம்மோத்ஸவத்தின் எட்டாம் நாள் அன்று திருமலையப்ப ஸ்வாமி உபய நாச்சிமார்களுடன் திருத்தேரில் பவனி வருவார். இரதத்தை ஒக்கும் நம் சரீரத்தை புத்தி என்னும் சாரதியைக் கொண்டு சரியான பாதையில் பயணிக்க வைக்கும் ரத சாரதியான ஆத்மாவை அடையாளம் கண்டு, சேவித்து தரிக்க வேண்டும் என்பதே இந்த திருத்தேரின் பரமார்த்தம்.**

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸ்ரீபாலாஜி அறுவை சிகிச்சை, ஆராய்ச்சி மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வு மையம் [பர்ட்]

## BIRRD





- போலியோ மெல்லிடஸ், பெருமூளை வாதம், பிறவிக் கோளாறுகள், முதுகுத்தண்டு காயங்கள் மற்றும் எலும்பு சம்மந்தமான மூட்டு சிதைவு நோயாளிகளுக்கு முழுமை யான இலவசமாக சேவைகளை வழங்குவதற்காக அதி நவீன மருத்துவ உபகரணங்களுடன் பர்ட் மருத்துவமனை நிறுவப்பட்டது.
- மக்கள் சேவையே மாதவ சேவை என்பதை கருத்தில் கொண்டு நோயாளிகளுக்கு மனிதாபிமான கண்ணோட்டத் துடன் இம்மருத்துவ மனைக்கு உங்கள் பங்களிப்பினை நன்கொடையாக வழங்கிடுங்கள்.
- நன்கொடைகளுக்கு வருமான வரிச்சட்டம் 80(ஜி) ன்படி வரி விலக்கும் உண்டு.



காசோலை/ வரைவோலையை "செயலாட்சித் தலைவர், தி.தி.தே." எனும் பெயரில் எடுத்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

உதவி செயலாட்சித் தலைர்
(நன்கொடைப் பிரிவு),
ஒருங்கிணைந்த நன்கொடையாளர்
நிர்வாக மையம்,
ஆதிசேஷ ஓய்வு இல்லம்,
கூடுதல் செயலாட்சித் தலைவர்
முகாம் அலுவலகம் அருகில்,
திருமலை,
தொ.எண் : 0877-2263472.

இயக்குனர், பர்ட் அறக்கட்டளை,
தி.தி.தே. திருப்பதி – 517 501.
தொ.எண். 0877-2264025,
2264619.



இணையதளம் : www.tirumala.org
மின்னஞ்சல் : officebirrd@gmail.com
மொபைல் செயலி : BIRRD HOSPITAL



# செப்டம்பர் 2023
# ராசி பலன்கள்



- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.

### மேஷம்

பழைய பாக்கிகள் வசூலாகும். தொழில் போட்டிகளில் வெற்றி கிடைக்கும். தாயின் ஆரோக்யத்திலும் குழந்தைகளின் ஆரோக்கியத்திலும் சிறு குறைபாடுகள் ஏற்பட்டுப் பிறகு சரியாகும். தந்தையின் ஆலோசனை பேருதவியாக இருக்கும். தெய்வ காரியங்களில் ஈடுபட்டு நல்ல பலன்களைப் பெறுவீர்கள். மொத்தத்தில் எதிரிகளை வெற்றி கொள்ளும் மாதமிது.

### ரிஷபம்

தொழில் துறையில் போட்டியும் அலைச்சலும் மிக அதிகமாக இருக்கும். உழைத்தும் அதற்குரிய வருமானம் இருக்காது. ஆரோக்யத்தில் எச்சரிக்கை தேவை. புது முயற்சிகளில் தாமதித்து வெற்றி கிடைக்கும். தற்போது செய்து கொண்டிருக்கும் வேலையை நழுவ விடாதீர்கள். யோசித்து முடிவெடுக்கவும். மிகவும் கஷ்டப்பட்டு உழைத்து முன்னேறும் மாதமிது.

### மிதுனம்

காரமான பொருட்களைதவிர்க்கவும். தாய், தந்தையரின் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. தொழில் துறையில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். நண்பர்கள், உறவினர்களால் பிரச்சனைகள் ஏற்பட்டுச் சரியாகும். உங்கள் செயல்பாடுகளை முன்னமே வெளியில் சொல்வதைத் தவிர்க்கலாம். தொழிலில் புதிய முயற்சிகளைச் செய்யலாம். ஏற்றத்தைத் தரும் மாதமிது.

### கடகம்

மனைவியின் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. மூட்டு வலிகள், கால் வலிகள் ஏற்படும். மாணவர்கள் மிகுந்த அக்கறையுடன் படித்தால் மட்டுமே நல்ல மதிப்பெண்களைப் பெற முடியும். கடன் கொடுப்பதையும், தேவையற்ற செலவுகளையும் தவிர்க்கவும். எச்சரிக்கையாக இருக்க வேண்டிய மாதமிது.

### சிம்மம்

புதுவாகனம், வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. திருமணம் கைகூடும். கணவன்-மனைவிக்குள் கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டுப் பிறகு சரியாகும். தொழில் துறை வளர்ச்சிக்காக நிறைய செலவுகள் செய்ய வேண்டி இருக்கும். அதற்கான வருமானம் கிடைக்கும். சகோதரர்களுக்கு நன்மையுண்டு. பொதுவில் நல்ல முன்னேற்றத்தைத் தரும் மாதமிது.

### கன்னி

செலவினங்கள் அதிகமாகும். ஜீரணக் கோளாறுகள் ஏற்படும். ஜாமீன் போடுவதையும், கடன் வாங்குவதையும் கொடுப்பதையும் தவிர்க்கவும். பேசும்போது எச்சரிக்கை தேவை. செலவுக்கு ஏற்ற வருமானத்தைக் கஷ்டப்பட்டுப் பெற வேண்டியிருக்கும். மிகவும் கஷ்டப்பட்டுப் படித்தால் மட்டுமே நல்ல மதிப்பெண்களைப் பெற முடியும். எச்சரிக்கையாக இருக்க வேண்டிய மாதமிது.

### துலாம்

செலவிற்கேற்ற வருமானம் கிடைக்கும். தொழில் துறையில் புது முயற்சி வெற்றி தரும். திருமணம் கை கூடும். உங்கள் ஜாதகத்தில் உள்ள தோஷங்களுக்கு ஏற்ற பரிகாரம் செய்ய உகந்த மாதமிது. குழந்தைகள் அடம் பிடித்தாலும் எதிர்காலத்தில் நல்ல முன்னேற்றம் பெறுவர். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவார்கள். மொத்தத்தில் யோகமான மாதமிது.

### விருச்சிகம்

தொழில் வளர்ச்சிக்காகவும், குடும்பத் தேவைக்காகவும் கடன் வாங்க வேண்டிய சூழல் உண்டாகும். தொழில் துறையில் புத்திசாலித்தனத்துடன் செயல்பட்டு வெற்றியைக் காண்பீர்கள். சிறு பிரச்சனைகள் ஏற்பட்டுச் சரியாகும். தொழில் அலைச்சல் காரணமாகத் தூக்கம் குறையும்.கர்ப்பவதிகள் பயணத்தைத் தவிர்ப்பது நலம். நன்மையும், தீமையும் கலந்த மாதமிது.

### தனுசு

தொழில் துறையில் புதிய முயற்சிகளை செய்து வெற்றி பெறுவீர்கள். தொழில் போட்டியை எளிதில் சமாளிப்பீர்கள். திருமணம் கைகூடும். குழந்தை பாக்கியமும் விரைவில் உண்டு. வீடு, மனை வாங்கும் யோகமும், புதிய வாகனம் வாங்கும் யோகமும் உண்டு. மனைவி குழந்தைகளால் தனலாபமும் சந்தோஷமும் உண்டு. மொத்தத்தில் யோகமான மாதமிது.

### மகரம்

மற்றவர்களுடன் பேசும் போது எச்சரிக்கை தேவை. தேவையற்ற விவாதத்தைத் தவிர்க்கவும். தொழிலில் அலைச்சல் அதிகமாகும். உத்தியோகஸ்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும். தாய்-தந்தையரின் உதவிகள் கிடைக்கும்.மாதத்தின் பின் பகுதியில் சந்தோஷமடைவீர்கள். மொத்தத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய மாதமிது.

### கும்பம்

தொழில் துறையில் வேலைப்பளு மிக அதிகமாக இருக்கும். இளைய-மூத்த சகோதரர்களுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. தொழில் துறையில் மாதத்தின் முன் பகுதியில் முடக்கமும் பின்பகுதியில் முன்னேற்றமும் உண்டாகும். கணவன்-மனைவிக்குள் அடிக்கடி கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டுப் பிறகு சரியாகும். சிறிது சிரமப்பட்டு முன்னேறும் மாதமிது.

### மீனம்

தொழிலில் தன லாபம் கிடைக்கும். ஆரோக்யத்தில் குறைபாடுகள் நீங்கும். மனைவியின் ஆரோக்ய குறைபாடுகள் நீங்கும். திருமணம் கைகூடும். செலவினங்கள் அதிகமாகும்.காரமான உணவுகளை தவிர்க்கவும். பழைய பாக்கிகள் வசூலாகும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்களைப் பெறுவார்கள். ஏற்றம் தரும் மாதமிது.

# சந்தேகம் தெளிவோம்



-நாவல்பாக்கம்
ஸ்ரீஉ.வே. வாஸுதேவாசார்யார்,
திருவனந்தபுரம்

**கே: வைகானஸ ஆகமம் என்பது என்ன? திருமலையில் அதைக் கடைபிடிக்கக் காரணம் என்ன?**

ப : விஷ்ணு பகவானை பூஜை செய்யும் முறைகளை சொல்லும் நூல்களுக்கு ஆகமம் என்று பெயர். அதில் இரண்டு முறைகள் உள்ளன. அவற்றை ஸ்ரீவைகானஸ ஆகமம் என்றும், ஸ்ரீபாஞ்சராத்ர ஆகமம் என்றும் சொல்வர். விகனஸர் என்னும் மாமுனிவர் தோற்றுவித்தது வைகானஸ ஆகமம் ஆகும். இவர் பகவானின் அம்சம் கொண்ட மாமுனிவர். இவர் அருளிய ஆகம முறையைப் பின்பற்றி பூஜைகளும் உத்ஸவங்களும் பல திவ்ய தேசங்களில் நடக்கின்றன. அவற்றில் முக்கியமானது திருமலை திவ்ய தேசம்.

திருமலையில் "வைகானஸ ஆகம முறையில் பெருமானை பூஜித்து வரவும்" என்று வராஹப் பெருமானே ஆணையிட்டான் என்று புராணம் சொல்கிறது. பத்ம புராணத்திலும் இந்த விஷயம் உள்ளது. அதனால், பெருமாள் அதையே திருவுள்ளம் பற்றி இருக்கிறான் என்பதால், அன்று முதல் இன்றளவும் வைகானஸ ஆகம முறையிலேயே இங்கு பூஜைகளை பெரியோர்கள் நடத்தி வருகின்றனர்.

திருமலையப்பனின் அஷ்டோத்தர அர்ச்சனையில் "வைகானஸ முனிச்ரேஷ்ட பூஜித:" என்கிற திருநாமம் உள்ளது. ஆகையால் வைகானஸ ஆகமத்தை அருளிய விகனஸ முனிவரே இந்தப் பெருமானை பூஜித்தார் என்பர்.

**கே: திருமலையைப் பற்றிப் பாடிய ஆழ்வார்கள் திருமலை ஏறாததற்குக் காரணம் என்ன?**

ப : ஆழ்வார்கள் திருமலை ஏறவில்லை என்று ஒரு கருத்து உள்ளது. அதன் விளக்கம். திருமலை ஆனது பெருமான் அதிஷ்டானம் செய்யும் அவனது திருமேனிக்கு சமம் என்று புராணம் சொல்வதால், அதில் ஏறுவதற்கு தயக்கம் காட்டினார்கள். "திருவேங்கட மாமலை ஒன்றுமே தொழ" என்று ஆழ்வார் அருளியுள்ளபடி, திருமலையை மட்டுமே தொழுதனர். அதனால்தான் ஸ்ரீபகவத் ராமாநுஜர் திருமலையில் ஆழ்வார்களை பிரதிஷ்டை செய்யாமல், கீழே ஸ்ரீகோவிந்தராஜன் சன்னதியில் பிரதிஷ்டை செய்து வைத்தார் என்று ஸ்ரீபரகால ஜீயர் அருளிய குருபரம்பரை சொல்கிறது.

வேறொரு கருத்தும் சிலர் சொல்வர். "எம்பெருமான் பொன்மலை மேல் ஏதேனும் ஆவேனே" என்றும், "பொன் வட்டில் பிடித்து உடனே புகப்பெறுவேன் ஆவேனே" என்றும் குலசேகர ஆழ்வார் அருளியதைப் பார்த்தால், ஆழ்வார்கள் மலையில் வசிக்க விரும்பினர் என்றும் தெரிகிறது. "திருமலையில் ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்" என்று நம்மாழ்வார் அருளுகிறார். "தத்ர ஆருடை" என்பதாக ஸ்ரீவேதாந்த தேசிகன், திருமலை மேல் முன்னோர்கள் ஏறியதாக சாதிக்கிறார். அதனால் ஆழ்வார்கள் மலையில் ஏறி மங்களாசாசனம் செய்திருக்கலாம் என்பர்.

**கே: இராமாநுஜர் திருமலைக்கு எத்தனை முறை விஜயம் செய்தார்?**

ப : மூன்று முறை விஜயம் செய்தார் என குருபரம்பரை தெரிவிக்கிறது. முதலில் திருமலையில் திருமலை நம்பிகளிடம் ஸ்ரீமத் இராமாயணம் காலக்ஷேபம் கேட்டார். பிறகு இரண்டாவது முறை வந்தபோது, பெருமானுக்கு சங்கு-சக்ரங்களை மீண்டும் சமர்ப்பித்தார். பின்னர் மூன்றாம் முறை ஸ்ரீகோவிந்தராஜனை எழுந்தருளப் பண்ணினார். மூன்றாவது முறை திருமலைக்கு எழுந்தருளவில்லை என்றும் சிலர் சொல்வர்.

நீதிக்கதை

# சரணாகதியே நம்மை காக்கும்



*வேதநூல் பிராயம் நூறு மனிசர்தாம் புகுவரேலும்*
*பாதியும் உறங்கிப் போகும்!*
*நின்றதில் பதினையாண்டு! பேதை பாலகனதாகும்*
*பிணிபசி மூப்புத் துன்பம் ஆதலால் பிறவி வேண்டேன்*
*அரங்கமா நகருளானே!*

உலகத்தில் மானிடப் பிறவி என்பது (ஜன்மாந்தர சகஸ்ர) ஆயிரமாயிரம் பிறவிகளிலே ஆயிரமாயிரம் நற்றவங்களாலே பெறக்கூடிய தாகும். அதனை வருந்திப் பெற்றாலும் அவர்களில் பலரும் ஏதேதோ காரணங்களாலே இறக்கக் கூடியவர்கள் பெரும்பான்மையோர் ஆவார்கள். வேத சாத்திரத்தில் "தாயுர்வை புரு" (மனிதன் நூறு பிராயம் வாழ்பவன்) என்று கூறியுள்ளபடி நிறையாண்டுகள் (தீர்க்காயுஷாக) வாழக்கூடியவர்கள் சிலரேயாவர்.

விதிவசத்தால் சிலர் நூறு ஆண்டுகள் புகுந்து வாழப் பெற்றாலும் அவரது வாழ்நாள் கழிகின்ற வகையை ஆராய்ந்தால், ஒரு நொடிப் பொழுதாவது நற்போதாக, நல்லபொழுதாகக் கழிய வழியில்லை. இறைவனை மூலமுதல் முழுக்காரணனை நினைக்கவும் நேரமில்லாது போகிறது. சூரியன் மறைந்து மீண்டும் உதிக்கும் அளவும் உறங்குவது ஒரு நியமமாக வந்து விட்டதால், ஒரு நாளில் உள்ள அறுபது நாழிகையில், முப்பது நாழிகை (12 மணி நேரம்) உறக்கத்தில் கழிகிற கணக்கில் பாதி வாழ்நாள் ஆகிய ஐம்பது வருடம் உறக்கத்தால் கழிந்ததாகிறது! மற்ற பாதி வாழ்நாளில் தாயிடம் வளரும் குழந்தைப் பருவமாய்ச் சில காலமும், எத்தனை தீம்பு செய்தாலும் சீறவொண்ணாதபடி செல்வப் பிள்ளைப் பருவமாய்ச் சிலகாலமும், பிறகு பருவ எழிலாகிய (யௌவணம்) அழகு வந்து புகுந்து, அர்த்தமில்லாமல் அலைந்து திரிந்து சில காலமும், இந்திரியங்களின் சிறையிலே அகப்பட்டு, தடுமாறி நிற்பதாகச் சில காலமும், வரம்பு கடந்த புண்ணிய பாவங்களின் பலனை இப்பிறவிலேயே அனுபவிக்கிறார் என்றபடி, பருவ காலத்தில் செய்த, எல்லையிலாக் குறும்புகளுக்குப் பலனாகக் கிட்டும் பிணிகளால் வருந்துவ தாய்ச் சில காலமும், பசி மயக்கத்தினால் இடர்ப்படுவதாய்ச் சில காலமும், குடும்ப பாரத்தினால் சில காலமும் கழிந்து போய்விடுகின்றன.

மீதமுள்ள சில காலமும் ஆத்மாவைப் பற்றி – உன் பொற்பாதத் தாமரைகளைப் பற்றிச் சிந்திக்கப் பொழுதே கிடைப்பது அரிதாக உள்ளதே பெருமானே! அரங்கமா நகருளானே! ஆதலால் எனக்கு இப்பிறவி வேண்டாம் என்கிறார். ஆதலால் மானிடராய்ப் பிறந்த நாம் ஒவ்வொருவரும் எவ்வளவோ வாழ்க்கைத் துன்பத்துள் உழன்றாலும், அத்துன்பங்கள் எல்லாம் இறைவனின் பாதாரவிந்தங்களை – பொன்னார் திருவடிகளை எப்போதும் பற்றிக் கொள்ள வேண்டும்; பற்றிக் கொள்கின்றபோது நம் பாவங்கள் – தீவினைகள் நொறுங்கிப் போகின்றன! என்பதையெல்லாம் நம் இளந்தலைமுறையினர்க்கு உணர்த்த வேண்டும் என்பதற்காகவே நமது தொண்டரடிப்பொடியாழ்வார் நீதி நெறி விளக்கமாகப் பாடித் தந்துள்ளார் என்று கொள்ளலாம்! இதைத்தான் உலகப் பொதுமறையும், *"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு"* என்றது.

– முனைவர் ச. செந்திலாண்டவன்,
சென்னை, 9444582856.

# பஞ்ச கவ்ய பொருட்கள்

வேத கலாச்சாரத்தில் பசுவிற்கென்று தனிச் சிறப்புண்டு. பசு மானிடர்களுக்கு அளிக்கும் சாணம், கோமியம், பால், நெய், தயிர் முதலானவை விலை மதிப்பற்ற பஞ்ச கவ்யங்களாகச் சிறப்புப் பெற்றுள்ளன. இப்பஞ்ச கவ்யத்தின் வாயிலாக தி.தி.தே. 15 வகையான ஆயுர்வேதப் பொருட்களை உற்பத்தி செய்கின்றது.




**தூபம் :** இந்த தூபம் நுண்கிருமிகளான பாக்டீரியா, வைரஸ் முதலானவற்றினால் ஏற்படுகின்ற காற்று மாசினை குறைத்து புனிதமாக்குகின்றன.

**தன்சிகா பற்பொடி :** இதனை உபயோகிப்பதனால் வாய், பற்கள், ஈறுகள் சம்மந்தப்பட்ட நோய்கள் வராமல் தவிர்க்கப்படுகின்றன.

**ப்ருத்வி - விபூதி :** இந்த விபூதியை அணிவதால் ஐஸ்வரியம் கிட்டும். இது ஆரோக்கியத்திற்கும் நன்மை பயக்கும்.

**இரண்மயி :** இந்த ஃபேஸ் பேக் உபயோகிப்பதனால் முகப்பரு, கரும் புள்ளிகள், கண் விழி கருவளையங்களைக் குறைக்கலாம்.

**மஹி :** இது தோலை பளபளப்பாக வைத்து, தோலினை காத்து, முகப்பரு, தோல்வியாதிகளை போக்குகின்றது. மேலும், இது தோல்மீது படர்ந்துள்ள நுண் கிருமிகளை அழிக்கின்றது.

**கச்யபி :** இந்த ஷாம்பு உச்சந்தலை பாதுகாப்பிற்கு உபயோகப் படுகின்றது.

**உர்விநாஜல்-ட்ராப்ஸ் :** இந்த சொட்டு மருந்து தினமும் காலையில் மூக்கில் இரண்டு சொட்டு விடுவதினால் தலைவலி, அடிக்கடி ஏற்படும் சளித்தொல்லை குறையும். கண், செவிகள் வலிமை பெறும்.

**நந்தினி-கோஅர்க :** இதனை உலகம் முழுவதிலும் புற்று நோய், சுவாசக் கோளாறு, மஞ்சள் காமாலை போன்ற நோய்களுக்குக்கான சிகிச்சைக்கு மருந்தாகப் பயன்படுத்துகின்றனர்.

**பூமி-மூலிகை தரை கிளினர் :** தரையில் அசுத்தங்களை போக்கு வதோடு மட்டுமின்றி நுண் கிருமிகளையும் அழிக்கவல்லது. நறுமணத் துடனும் திகழக்கூடியது.

**க்ஷம - வறட்டை, புவதி காடங்க்லாக்ஸ் :** இதனை யாகங்களுக்கு உபயோகிக்கின்றனர். தகனத்திற்கும் இவற்றினை உபயோகிப்பது மேன்மையாகக் கருதுகின்றனர்.


## பஞ்சகவ்ய தயாரிப்புகள் - அகர்பத்திகள்- ஸ்வாமி சித்திரப்படங்கள்

**திருவேங்கடமுடையான் கைங்கர்யத்திற்கு மற்றும் பிற முக்கியமான தி.தி.தே. ஆலய கைங்கர்யங்களுக்கு உபயோகப்படுத்தப்படும் மலர்களால் சித்திரப்படம் மற்றும் அகர்பத்திகள் தயாரிக்கப்படுகின்றன. இவை மிகவும் புனிதமானவை.**

# பல் சுவை பகுதி

# சித்திரப் பகுதி

எண்களை இணைத்து வண்ணம் தீட்டுங்கள்




படத்தைப் பாருங்கள்

வண்ணம் தீட்டுங்கள்








படத்தோடு ஏற்புடைய சொல்லை இணைக்க...

1. சூரியப் பிரபை
2. சந்திரப் பிரபை
3. முத்துப்பந்தல்
4. சர்வ பூபால
5. யானை
6. கருட
7. குதிரை
8. அனுமன்





மாறி மாறியுள்ள எழுத்துக்களை கண்டுபிடித்து,சரியாக மேலே உள்ள சித்திரத்திற்கு நேரே உள்ள கட்டத்தில் எழுதுவோமா!

*ள்வா, த்ஆதிர, டிப, றைடகபாப், யாஅமன்ய்ன, வாகுர்லகசேஆரழ், பாங்வெம்கமா, ன்அந்னழ்தாவா*



## வார்த்தைகளைச் சரியாக எழுதி ஆத்திசூடியைப் படிப்போமா!

கரவேல் இயல்வது, விலக்கேல் ஈவது, விலம்பேல் உடையது

இயல்வது கரவேல், ஈவது விலக்கேல், உடையது விலம்பேல்



| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | ↓ | 0 | 2 | 0 | 1 |
| | | 0 | 1 | 4 | 6 | 8 |
| 10 | 8 | 3 | 2 | 3 | 3 | 5 |
| 3 | 5 | 7 | 0 | 4 | 5 | 8 |
| 1 | 4 | 7 | 6 | 5 | 0 | 3 |
| 9 | 5 | 8 | 9 | 1 | | |
| 9 | 0 | 9 | 10 | → | | |



### பாதையைக் கண்டுபிடி

மஹாலக்ஷ்மி இல்லாத காரணத்தால் வைகுண்டத்திலிருந்து பூலோகத்திற்கு தாயாரைத் தேடிக்கொண்டு ஸ்ரீநிவாசர் திருவேங்கடவனாக திருமலையை வந்தடைந்த வழியினை எண்களின் வரிசையில் இணைத்து காட்டுங்கள்



### மாநிலத்தைக் கண்டுபிடி

தஞ்சாவூர் கோயில், ஜல்லிக்கட்டு, பரதநாட்டியம், கரகம், மாக்கோலம், திருக்குறள்அளித்த திருவள்ளுவர் சிலை எனப் பலச் சிறப்பு மிக்க இந்த

மாநிலம்: ..............

தமிழ்நாடு

வினாடி வினா

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி போட்டி எண்-14

**ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!**

1. திருவேங்கடமுடையான்அவதரித்த நட்சத்திரம், மாதம் ................................................
2. உள்ளத்திலேயே திருமலை பிரம்மோத்ஸவத்தை கண்ட ஆழ்வார்........................................
3. புல்லி என்ற அரசன் வேங்கடநாடு ஆண்டான் எனக் கூறும் நூல்.................................................
4. சிலப்பதிகாரத்தில் கோவலன் கண்ணகிக்கு திருவேங்கடத்தைப் பற்றிக் கூறியவன் ..............................
5. தயாசதகம் எனும் ஸ்தோத்திரத்தை அருளியவர் ........................................................................
6. மந்திபாய் வடவேங்கடம் எனப் பாசுரமிட்டவர் ...........................................................................
7. திருமலையில் முதலில் யாரை வணங்க வேண்டும் ....................................................................
8. ஸ்ரீநிவாசனின் மடப்பள்ளியைப் மேற்பாற்வையிடுபவர் ..............................................................
9. நீ அன்று உலகளந்தாய் எனப் பாசுரமிட்ட ஆழ்வார் .................................................................
10. திருவேங்கடம் அடை நெஞ்சமே எனக் கூறியவர் ......................................................................
11. பொன்மலையில் ஏதேனுமாக வேண்டும் என வேண்டியவர் .........................................................
12. நளகூபனுக்கும் மணிக்கிரீவனுக்கும் சாபவிமோசனம் அளித்தவர்.....................................................
13. தி.தி.தே. சப்த கோ பிரதக்ஷணம் அமைந்துள்ள இடம் ...............................................................
14. திருமலையில் பக்தர்களின் பசிப்பிணி போக்கும் கூடத்தின் பெயர் .............................................
15. திருவேங்கடவனுக்கு நடைபெறும் ஆகம பூஜை ........................................................................

## போட்டிக்கான நிபந்தனைகள்




- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்குட் பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்திய குடிமக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்த பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, T.T.D. Press Compound, K.T. Road, Tirupati-517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியை குறித்து எவ்வித தகவல்களும் தொலைபேசி வாயிலாக தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலைபேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.09.2023.

**விடையை எழுதுங்கள்!**
**திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்!!**

| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |

# இதில் பொருந்தாதது எது?



1. ..............................
2. ..............................
3. ..............................
4. ..............................

குறிப்பு : கருட வாகனம், ஏழுமலை, திருமலை ஏறும் இடங்கள், திருமலையில் உள்ள இடங்கள் இவற்றிற்கு தொடர்பு இல்லாதவற்றை எழுதவும்.



இரண்டு சித்திரங்களுக்கு இடையே உள்ள ஏழு வித்தியாசங்களைக் கண்டு பிடியுங்கள்



1) தீபம்
2) குத்து விளக்கு இடதுபுறம்
3) தூபம் கிண்ணம்
4) தாம்பூலத் தட்டு
5) மலர் புட்டி
6) ஸ்வாமி மலர்
7) குத்து விளக்கு வலப்புறம்


# காளிங்க நர்த்தனம்

சித்திரக் கதை

*கதை மூலம்* :திரு. டி. ஸ்ரீநிவாச தீக்ஷிதலு
*சித்திரம்* :திரு. டி. துவரகநாத்
*தமிழாக்கம்* :திருமதி எஸ்.வைஷ்ணவி

ஒருநாள் கோபாலகர்கள் யமுனா நதி அருகில் ஆடுமாடுகளை மேய்த்துக் கொண்டிருந்தனர். கண்ணன் பலராமர் கூட அவர்களுடனே இருந்தார்கள். பசுமாடுகளோ தாகத்தைத் தணிப்பதற்காக யமுனை நதி நீரைப் பருகி உடனே இறந்து விழுந்தன. கோபாலகர்கள் பயத்துடன்...




கண்ணனுக்காக எல்லோரும் அழுது கொண்டிருக்க, பலராமன் எல்லோரையும் சமாதானப்படுத்திக் கொண்டிருந்தான்.
நமது கண்ணனுக்கு எதுவும் ஆகாது. தைரியமாக இருங்கள்!
காளிங்கன் கோபமாக தனது வாலால் கண்ணனைக் கட்டி போட்டார்.
ஏய்! சிறுவனே! தூரமாகப் போய் விடு.
போதும்! உன் பேச்சை நிறுத்து!
கண்ணன் தனது சரீரத்தை பெரிதாக்கினார். நாகராஜனின் பிடி நழுவியது. காளிங்கன் படம் எடுத்தாடினான்.
இவன் சிறுவன் அல்ல.
காளிங்கனின் நாகபடத்தின் மேலேறி நின்று கண்ணன் நடனம் செய்ய ஆரம்பித்தான்.
பணிமணி மண்டன சரணோ! நீலமோகனா!
காளிங்கனின் அகங்காரம் அடங்கியது. தலை வணங்கினான். தேவர்கள் பூமாரி பொழிந்தனர். தனது கணவனை மன்னித்தருளுமாறு அவனுடைய மனைவியர் வேண்டினர்.
நாகராஜா! ரமணகத்தீவிற்குச் செல்! ஆனந்தமாக இரு! உன் தலை மேல் என் பாதங்கள் பதித்ததால் கருடன் உன்னை எதுவும் செய்ய மாட்டான்.
பாக்யமானேன் தேவதேவா!
காளிங்கன் கண்ணனைப் போற்றித் துதித்தான்.
கிருஷ்ணம் வந்தே தேவதேவம்
திருமலையில் சர்வ பூபால வாகனத்தின் போது காளிய மர்த்தனம் செய்யும் வண்ணம் திருமலையப்ப ஸ்வாமி திருவீதி உலா வருவதிலிருந்து இந்தக் கிருஷ்ணாவதாரத்தின் மேன்மையை உணரலாம்.
முற்றும்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

(சமய மாத இதழ்)

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : _______________
(பெரிய எழுத்துக்களில்) _______________
_______________
_______________

அலைபேசி எண் : □□□□□□□□□□

2. தேவையான மொழி : □ தெலுங்கு □ தமிழ் □ கன்னடம் □ இந்தி □ ஆங்கிலம் □ சமஸ்க்ருதம்

3. வருட / ஆயுள் சந்தா : □ ரூ.240/- □ ரூ.2,400/- (12 வருடங்கள்)

4. சந்தா புதுப்பித்தல் :
(அ) சந்தா எண். :
(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :
பணவிடை (எம்.ஓ./ஐ.எம்.ஓ./ஐ.பி.ஓ)
ரசீது எண் : தேதி:
வங்கி கேட்பு வரைவோலை/காசோலை
எண். : தேதி:
இடம் :
நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்சென்டர்

உங்களுக்காக

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
**0877-**
**2233333**
**2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/- ஆயுள்சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள்) காசோலை, இ.எம்.ஒ.,ஐ.பி.ஓ., டி.டி. -யை பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ அல்லது வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

**எங்கள் முகவரி :**
பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
தி.தி.தேவஸ்தான அச்சக வளாகம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி - 517507.

Printed by Sri P. Ramaraju, M.A., and Published by Dr. K. Radha Ramana, M.A., M.Phil., Phd., on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.

# திருமலை திருப்பதி தேவஸ்தானம்





திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள் தி.தி.தேவஸ்தான பொறுப்பாண்மைக்குழுத் தலைவராக 22-06-2019 முதல் 07-08-2023 வரை பதவிவகித்து திருவேங்கடமுடையானின் கைங்கர்யத்தில் அயராது ஈடுபட்டு வந்தார்.

கடந்த 4 ஆண்டுகள் தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவராக பொறுப்பு வகித்த திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள் எல்-1, எல்-2, எல்-3 டிக்கெட்டுகளை ரத்து செய்து சாதாரன பக்தர்களுக்கு ஸ்வாமி தரிசனத்திற்கு முன்னுரிமை வழுங்கும்படி செய்தார். அதிகாலை இடைநிறுத்த தரிசன நேரத்தையும் சாதாரண பக்தர்களுக்காக மாற்றி அமைத்தார்.

நடந்து செல்லும் பக்தர்களின் வசதிக்காக முழங்கால் மெட்டு அருகில் உள்ள சாலையில் மேற்கூரைகளையும் அமைத்தார்.

சிறு குழந்தைகளின் இதய சிகிச்சைக்காக திருப்பதியில் அதிநவீன ஸ்ரீபத்மாவதி குழந்தைகள் இதய பல்நோக்கு மருத்துவ மனையை கட்டியமைத்தார். திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் ஆலயத்தில் பக்தர்கள் தங்குவதற்காக யாத்திரிகர்கள் தங்கு வசதி கட்டிடம் அமைத்தார்.

ஸ்ரீவாணி அறக்கட்டளையை நிறுவி, அதன் மூலம் பெற்ற நிதி யினைக் கொண்டு தெலுங்கு மாநிலங்களில் அமைந்துள்ள பல ஆலயங்களின் வளர்ச்சிக்கு உதவினார். தி.தி.தே. கல்லூரிக ளில் புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கும் இவர் பங்களித்தார்.

நான்கு ஆண்டுகள் திருவேங்கடமுடையான் பக்தர்களுக்கு சிறந்த சேவை புரிய தனக்கு நல்வாய்ப்பினையும், நல்லருளையும் வழுங்கிய ஸ்வாமிக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

**அன்னாருக்கு நன்றி!**

தி.தி.தே. புதிய பொறுப்பாண்மைக்குழுத் தலைவராக திரு. பூமன கருணாகர ரெட்டி அவர்களுக்கு 10-08-2023 அன்று திருமலை ஆலயத்தில் கருடாழ்வார் சன்னதியின் அருகே தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு.ஏ.வி. தர்மா ரெட்டி ஐ.டி.இ.எஸ்.அவர்கள் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

வைகுண்டம் க்யூ கட்டிடத் தொகுதி வழியாக குடும்பத்தாருடன் சென்று ஸ்வாமியைத் தரிசித்த திரு. கருணாகர ரெட்டி அவர்களுக்கு ரங்க நாயக மண்டபத்தில் தி.தி.தே. செயலாட்சித் தலைவர் அவர்கள் ஸ்வாமி சித்திரப் படத்தையும், தீர்த்தப் பிரசாதங்களையும் வழங்கி கௌரவித்தார்.

திரு. பூமன கருணாகர ரெட்டி அவர்கள் ஸ்வாமி தரிசன விஷயத் தில் சாதாரண பக்தர்களுக்கே முதலில் முன்னுரிமை வழங்கப்படும் என்றும், நான் செல்வந்தர்கள் செல்லும் சேவையை விரும்ப மாட்டேன் என்றும் கூறினார். செல்வந்தர்கள், வி.ஐ.பி. தரிசனம் மட்டுமே வேண்டும் என்று விரும்பினால் ஸ்வாமி அருள் கிடைப்பது கடினம் என்பதை உணர வேண்டும் என்றார்.

பொறுப்பாண்மைக் குழுத்தலைவர், உறுப்பினர்கள், செயலாட்சித் தலைவர்கள், ஊழியர்கள் எனப் பலரின் கடின உழைப்பாலும், ஸ்வாமி பக்தியாலும் நல்ல நிர்வாக முறை தி.தி.தே.நிர்வகித்து வருகிறது. அதை மேலும் சிறக்க செய்வோம் என்றார்.

இந்து சனாதன தர்மத்தை உலகளவில் பரப்பவும், சமூக சேவை திட்டங்களை மேற்கொள்ளவும் இக்குழு செயல்படும் என்றும், உலகளவில் பரந்து இருக்கும் இந்துக்களை ஒரே குடைக்கீழ் திரட்டி சனாதான தர்மத்தை பிரச்சாரம் செய்ய தி.தி.தே. நிர்வாகம் தலைமை வகிக்கும் என்றார்.

**அன்னாரை வரவேற்கின்றோம்!**

SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-08-2023 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No. APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/ 2021-2023 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No. PMGK/RNP/WPP-04(5)/2021-2023" Posting on 20th of Every month.

